# உதயன்

விலை ரூபா 6.00

சுடர்:15 வள்ளுவர் ஆண்டு 2031 ஆவணி 18 ஞாயிற்றுக்கிழமை (03-09-2000) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:212


## ஐ.தே.க. ஆட்சிக்கு வந்தால்

# வடக்கு - கிழக்குப் பகுதிக்கு இடைக்கால நிர்வாக சபை!

## தேர்தல் விஞ்ஞாபனத்தில் அறிவிப்பு

கொழும்பு,செப்ரெம்பர்3

**ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சிக்கு வந்தால் வடக்கு - கிழக்கு மாகாணத்தை நிர்வகிக்க தற்கா லிக இடைக்கால நிர்வாக சபை ஒன்று அமைக் கப்படும். யுத்தத்தை முடிவுக்கு கொண்டுவரும் விதத்தில் சகல தரப்பினருடனும் பேச்சுக்கள் நடத் தப்படும்.**

**பொதுத் தேர்தலை ஒட்டி ஐ.தே.கட்சி நேற்று வெளியிட்ட தேர்தல் விஞ்ஞாபனத்தில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.**

நேற்று கொழும்பு மாநகரசபைத் திடலில் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நடை பெற்ற கட்சியின் 53ஆவது மாநாட் டில் வைத்து இத்தேர்தல் விஞ்ஞாப னம் வெளியிடப்பட்டது. அதில் அடங் கியிருந்த முக்கிய அம்சங்கள் வரு மாறு:-

☆ விலைவாசி உயர்வால் கஷ் டப்படும் சகல ஊழியர்களுக்கும் 2,000 ரூபா சம்பள உயர்வு வழங் கப்படும்.

☆ ஓய்வூதியர்களின ஓய்வூதியம் 750 ரூபாவினால் அதிகரிக்கப்படும்.

☆ சமுர்த்திக் கொடுப்பனவு 1000 ரூபாவால் அதிகரிக்கப்படும்.

☆ ஐ.தே.கட்சியின் ஆட்சிக் காலத்தில் 5லட்சமாக இருந்த வேலையில்லாதோர் எண்ணிக்கை இப்போது - இந்த ஆட்சியில் - இருபது லட்சமாக உயர்ந்துள்ளது. அவர் கள் அனைவருக்கும் வேலை வாய்ப் புப் பெற்றுக்கொடுக்க துரித நடவ டிக்கை எடுக்கப்படும்.

☆ சுதந்திர பொலீஸ் ஆணைக்

(12ஆம் பக்கம் பார்க்க)

## அம்பாறையில் கூட்டணி தனித்துப் போட்டி

அம்பாறை,செப்.3

அம்பாறை மாவட்டத்தில் போட் டியிடுவதற்கான நியமனப் பத்திரங் களை தமிழர் விடுதலைக் கூட்டணி நேற்றுத் தாக்கல் செய்தது.

டாக்டர் வசந்தராஜபிள்ளை தயா ணந்தராஜாவை முதன்மை வேட்பாள ராகக் கொண்டு நியமனப் பத்திரம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

தமிழ்க் கட்சிகள் அனைத்தை யும் ஒன்றிணைத்து பொதுப் பட்டிய லில் போட்டியிட தமிழர் மகாசபை எடுத்த முயற்சிகளுக்கு தமிழர் விடு தலைக் கூட்டணி எதிர்ப்புத் தெரி வித்ததையடுத்து கூட்டணி தவிர்ந்த ஏனைய தமிழ்க் கட்சிகள் பொதுப் பட்டியலில் போட்டியிட நேற்று முன் தினம் நியமனப் பத்திரங்களைத் தாக்கல் செய்திருந்தமை தெரிந் ததே (இ-7-14)

## அமைச்சர் ஜெயரட்ண விபத்தில் காயம்

கொழும்பு,செப்.3

பொது மக்கள் ஐக்கிய முன்ன ணியின் பொதுச் செயலாளரும் அமைச்சருமான டி.எம்.ஜெயரட்ண பயணம் செய்த கார் லொறி ஒன் றுடன் மோதியதில் அமைச்சர் மற் றும் அவரது மனைவி உட்பட நால் வர் காயமடைந்தனர்.

இந்தச் சம்பவம் கண்டி-கொழும்பு வீதியில் - கேகாலை மீபிட்டிய பகு தியில் நேற்றுமுன்தினம் இரவு 11.45 மணியளவில் இடம்பெற்றது.(இ-7-8)



யாழ். மாவட்டத் தேர்தலில் சுயேச்சை யாக போட்டியிடும் ஈ.பி. ஆர்.எல்.எவ் சுரேஷ் அணியின் முதன்மை வேட்பாளர் தர்மராசா வில்சன் (மத்தியில்) நேற்று நடத்திய செய்தி யாளர் மாநாட்டில் எடுக் கப்பட்ட படம்.

வலது புறத்தில் என்.ஏ ஜெயக்கொடியும் இடது புறத்தில் பசுபதி ஜீவரத்தினமும் காணப் படுகின்றனர்.

# போரை நிறுத்தி அமைதிச் சூழலில் பேச வேண்டும்!

## சுரேஷ் அணி கோரிக்கை

யாழ்ப்பாணம்,செப்ரெம்பர்3

**வடக்கு - கிழக்கு மாகாணங்களில் தொடரும் யுத்தம் நிறுத்தப்பட்டு அமைதியான சூழல் ஏற்ப டுத்தப்பட வேண்டும்.**

**- இவ்வாறு ஈ.பி.ஆர்.எல்.எவ். சுரேஷ் அணியின் சுயேச்சைக்குழுவின் யாழ். மாவட்ட முதன்மை வேட்பாளர் தர்மராசா வில்சன் கோரிக்கை விடுத் தார்.**

யாழ்.சாந்தி தியேட்டரிலுள்ள தமது கட்சியின் அலுவலகத்தில் நேற்று அவர் நடத்திய செய்தியா ளர் மாநாட்டிலேயே இவ்வாறு கூறி னார்.

அவரது அணியின் யாழ்.மாவட்ட வேட்பாளர்களான பசுபதி ஜீவரத் தினம், என்.ஏ.ஜெயக்கொடி ஆகி யோரும் மாநாட்டில் உடனிருந்தனர்.

அவர் அந்தச் செய்தியாளர் மாநாட்டில் மேலும் கூறியதாவது:-

துப்பாக்கிச் சத்தங்கள் நிறுத்தப் பட்டு ஓர் அமைதியான சூழலை

(11ஆம் பக்கம் பார்க்க)

# மட்டுப்படுத்தப்பட்ட தாக்குதல் இடம்பெறுவதாகத் தெரிவிப்பு

கொழும்பு,செப்.3

வட பகுதியில் மட்டுப்படுத்தப் பட்ட தாக்குதல் நடவடிக்கைகளை படையினர் மேற்கொண்டுள்ளனர் என்று விசேட ஊடகத் தகவல் நிலையம் நேற்றுத் தெரிவித்தது.

றொக்கெட், பீரங்கிகள் மூலம் விடுதலைப் புலிகளின் முன்னணி பாதுகாப்பு அரண்கள் மீது தாக் குதல்கள் நடத்தப்பட்டன என்றும்-

கொழும்புத்துறை, செம்மணி, கச்சாய்ப் பகுதிகளில் நடத்தப்பட்ட தாக்குதல்களினால் விடுதலைப் புலி களின் தரப்பில் 3 பேர் கொல்லப் பட்டனர் என்றும் விசேட ஊடகத் தக வல் நிலையம் தெரிவித்துள்ளது.

# நாயன்மார்கட்டுப் பகுதியில் நேற்று அடுத்தடுத்து ஷெல்கள்!

## மக்கள் பீதியினால் இடம்பெயர்வு

யாழ்ப்பாணம்,செப்.3

நேற்றிரவு 8 மணியளவில் நாயன்மார்கட்டு, நாயன்மார் வீதிப் பகுதியிலும் நல்லூர் முத்திரைச் சந்தியை அண்டிய பகுதிகளிலும் அடுத்தடுத்து ஆறு, ஏழு ஷெல்கள் வீழ்ந்ததை அடுத்து அப்பகுதி மக்கள் இரவோடிரவாக இடம்பெயர்ந்து நல்லூர் ஆலயப் பகுதியில் தஞ்சம் புகுந்தனர்.

இந்தச் ஷெல்களினால் காயமடைந்த நான்கு பொதுமக்கள் நேற்றிரவு 9.30 மணியளவில் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர்.

நல்லூர் கன்னார் வீதியைச் சேர்ந்த, திரிலோகச்சந்திரன் சரோஜா (வயது 29), பவளகாந்தன் சுபர்ஜினி (வயது 18) ஆகியோரும் -

(12ஆம் பக்கம் பார்க்க)

# கப்பல் பயணிகள் சிலர் திருப்பி அனுப்பப்பட்டனர்!

யாழ்ப்பாணம்,செப்.3

'ஹெந்தல' மற்றும் 'லங்கா முடித்த' ஆகிய கப்பல்கள் மூலம் திரு கோணமலைக்குச் செல்வதற்கு சுமார் ஆயிரத்து 800 பேர் நேற்று யாழ். சிவில் நிர்வாக அலுவலகத்தினால் யாழ்ப்பாணத்திலிருந்து 29 பஸ்களில் காங்கேசன்துறைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

பயணிகளை கப்பலுக்குள் ஏற்றுவதில் காலதாமதம் ஆனதால் கடைசி நான்கு பஸ்களில் சென்ற சுமார் 225 பயணிகள், கப்பலில் ஏறமுடியாமல் நேற்று மாலை யாழ்ப்பாணத்துக்குத் திருப்பி அனுப்பி வைக்கப்பட்டனர்.

முதலில் சென்ற 25 பஸ்கள் மூலம் காங்கேசன்துறைக்குப் போய்ச் சேர்ந்த பயணிகள் அனைவரையும் ஏற்றிக் கொண்டு இரு கப்பல்களும் நேற்று மாலையே காங்கேசனில் இருந்து புறப்பட்டதாக ஒரு தகவல் தெரிவித்தது.

(12ஆம் பக்கம் பார்க்க)

# ஈ.பி.டி.பி. உட்பட மேலும் 3 கட்சிகள் நேற்று வேட்புமனு தாக்கல் செய்தன

யாழ்ப்பாணம்,செப்.3

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர் தலில் யாழ்.மாவட்டத்தில் போட்டி யிடுவதற்காக ஈ.பி.டி.பி. உட்பட மேலும் மூன்று கட்சிகள் நேற்று வேட்பு மனுத் தாக்கல் செய்தன.

ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ.பி.டி.பி.), யாழ்.மாவட்டத்திலிருந்து இடம்பெயர்ந்த முஸ்லிம்கள் சார் பாக முஸ்லிம் ஐக்கிய விடுதலை முன்னணி, சிஹல உறுமய ஆகிய வையே இந்த மூன்று கட்சிகளும் ஆகும்.

இந்த மூன்று கட்சிகளுடனும் சேர்த்து இதுவரை 11 பதிவு செய் யப்பட்ட கட்சிகளும், ஒரு சுயேச் சைக் குழுவும் யாழ்.மாவட்டத்தில் போட்டியிடுவதற்கு வேட்பு மனு வைத் தாக்கல் செய்துள்ளன.

நேற்று வேட்புமனுத் தாக்கல் செய்த கட்சிகளின் வேட்பாளர் பட்டி யல் விவரம் வருமாறு:-

### ஈ.பி.டி.பி.

★ முதன்மை வேட்பாளர் டக் ளஸ் தேவானந்தா.

★ கார்த்திகேசு வேலும்மயி லும் குகேந்திரன்.

★ நடராஜா மதனராஜா.

★ தங்கரப்பிள்ளை சிவதாசன்.

★ சின்னத்துரை தவராசா.

★ கலாநிதி காசிலிங்கம் விக்னேஸ்வரன்.

(12ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ்க் காங்கிரஸ் கொழும்பிலும் போட்டி

கொழும்பு,செப்.3

எதிர்வரும் பொதுத் தேர்தலில் தமிழ்க் காங்கிரஸ் கொழும்பு மாவட் டத்திலும் போட்டியிட முடிவு செய் துள்ளது.

நாளை இதற்கான வேட்புமனுத் தாக்கல் செய்யப்படுமென தமிழ்க் காங்கிரஸ் பொதுச் செயலாளர் என். குமரகுருபரன் தெரிவித்தார்.

நேற்று தமிழ்க் காங்கிரஸ், வவு னியா மாவட்டத்தில் வேட்பு மனுத் தாக்கல் செய்தது.

யாழ்ப்பாணம், திருகோணமலை மாவட்டங்களில் இந்தக் கட்சியி னால் ஏற்கனவே வேட்புமனுத் தாக் கல் செய்யப்பட்டுள்ளது. (இ-8)

# முன்னாள் அமைச்சரான இராஜதுரையும் தேர்தலில்!

கொழும்பு,செப்.3

முன்னாள் இந்து கலாசார, தமிழ் மொழி அமுலாக்கல் அமைச்சர் செல்லையா இராஜதுரையும் தேர்த லில் குதித்திருக்கின்றார்.

முஸ்லிம் காங்கிரஸ், லிபரல் கட்சி போன்றவை சேர்ந்து அமைத் துள்ள தேசிய ஐக்கிய முன்னணி யின் மட்டக்களப்பு மாவட்டத் தலைமை வேட்பாளராக செ.இராஜ துரை போட்டியிடுகின்றார்.

பட்டியலில் இரண்டாவது வேட் பாளராக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கி ரஸ் பிரமுகரான ஹிஸ்புல்லாவின் பெயர் இடம்பெற்றுள்ளது.

இவர்களது வேட்புமனு நாளை தாக்கல் செய்யப்படுமென எதிர்பார்க் கப்படுகின்றது.

ஜனாதிபதி - அமைச்சர் அஷ்ரப் பேச்சுகளில் இணக்கம் ஏற்பட்டு பொ.ஐ.முன்னணியும்; முஸ்லிம் காங் கிரஸும் மட்டக்களப்பில் ஒரே பட்டி யலில் இணைந்து போட்டியிடுவது;

(12ஆம் பக்கம் பார்க்க)

## டிரக்டர் பெட்டி தேவை

நல்ல நிலையில் உள்ள இறக்குமதி செய்யப்பட்ட கீழ்ச் சட்டத்துடனான டிரக்டர் பெட்டி தேவை.

விலைக் கூற்றுடன்

**தலைவர்,**
**தென்மராட்சி மேற்கு பல நோ.கூ. சங்கம்**
**(கைதடி),**
**இணுவில் ஆஸ்பத்திரி, இணுவில்.**

*என்ற முகவரியில் தொடர்பு கொள்ளவும்.*

**சி.சுப்பிரமணியம்,**
*தலைவர்,*
**தெ.மே.ப.நோ.கூ.சங்கம்.**
**(கைதடி)**

*இணுவில் ஆஸ்பத்திரி,*
*இணுவில்.* (C/12800)

## இரவுக் காவலாளி தேவை

யாழ்ப்பாணம் வணிகர் கழகப் பணிமனைக்கு *(முந்திய ஈழநாடு கட்டடம்)* ஓர் இரவுக் காவலாளியை நியமிப்பதற்கான விண்ணப்பம் கோரப்படுகின்றது. விண்ணப்பங்கள் 05-09-2000 புதன்கிழமைக்கு முன் **யாழ். வணிகர் கழகம், இல.27, நவீனசந்தை, யாழ்ப்பாணம்** என்ற முகவரிக்கு அனுப்பிவைக்கவும். (C/12798)

## கொக்குவில் மஞ்சவனப்பதி முருகன் ஆலய வருடாந்த மஹோற்சவம்

மேற்படி ஆலய வருடாந்த மஹோற்சவம் நாளை **(04-09-2000)** திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி **13-09-2000** புதன்கிழமை தீர்த்த உற்சவத்துடன் நிறைவு பெறும்.

**விசேட உற்சவங்கள்**

**கொடியேற்றம்** - 04-09-2000 திங்கட்கிழமை மு.ப. 11 மணி.
**தண்டாயுதபாணி உற்சவம்** - 10-09-2000 ஞாயிறு பி.ப. 2 மணி.
**சப்பறத்திருவிழா** - 11-09-2000 திங்கள் மாலை 5 மணி.
**தேர்த்திருவிழா** - 12-09-2000 செவ்வாய் காலை 9 மணி.
**தீர்த்தத்திருவிழா** - 13-09-2000 புதன் காலை 9 மணி.
**பூங்காவனம்** - 14-09-2000 வியாழன் மாலை 4 மணி.
**அலங்கார உற்சவம்** - 15-09-2000 வெள்ளி மாலை 4 மணி.

*ஆலயத் தொண்டில்,*
*ஆலய நிர்வாக சபையினர்.*

*விளம்பர அன்பளிப்பு:*

*மகாலட்சுமி தேநீரகம்*
கொக்குவில் சந்தி,
கொக்குவில்.

**விக்னா தேயிலை**
மஞ்சவனப்பதி வீதி,
கொக்குவில்.

(77986)

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.**

## அறிவித்தல்

**உடற்கல்வி கற்கை நெறிக்கான உடற்தகைமை தகுதிகாண் பரீட்சை - 2000**

மேற்படி கற்கைநெறிக்கு விண்ணப்பித்துள்ள தகுதியான மாணவர்களுக்கான உடற்தகைமை தகுதிகாண் பரீட்சை 2000-09-05, 2000-09-06 ஆம் திகதிகளில் காலை 9.00 மணிக்கு பல்கலைக்கழக விளையாட்டு மைதானத்தில் நடைபெறும். தெரிவுப் பரீட்சையில் தெரிவு செய்யப்பட்டவர்களின் பெயர்ப்பட்டியல் உடற்கல்வி கற்கைநெறிப் பிரிவில் பார்வையிடலாம்.

**குறிப்பு:-**
உடற் தகைமை தகுதிகாண் பரீட்சைக்குத் தெரிவு செய்யப்பட்டவர்களுக்கான அனுமதி அட்டைகள் தபாலில் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

**- பதிவாளர்.**
31-08-2000 (C/12801)

**நாகம்ஸ்**
சுன்னாகம்
**அஜித் - ஷாலினி**
நடிப்பில்
**அமர்க்களம்**
(ரீல்ஸ்)
காட்சிகள்: 11.00, 2.30 (பு.நே.)

**ராஜா**
(யாழ்ப்பாணம்)
கார்த்திக், கௌசல்யா, அப்பாஸ், ஹீரா, ராதாரவி
மற்றும் பலரின் நடிப்பில்
**பூவேலி**
காட்சிகள்: 10.30, 2.00
(புதிய நேரம்)

## ஜேர்மன் நிறுவனத்தின் திட்டங்கள் தொடர்ந்து மேற்கொள்ளப்படும்

யாழ்ப்பாணம், செப்.3

ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனத்தினால் யாழ். மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற புனர்நிர்மாணத் திட்டங்களை தடங்கல் இன்றித் தொடர்ந்து மேற்கொள்ளுமாறு அந்த நிறுவனத்தின் யாழ். மாவட்டத்துக்கான புனர்நிர்மாணத் திட்டங்களின் குழுத்தலைவர் ஈ.கல்பார் தெரிவித்துள்ளார்.

அண்மையில் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்த இவர் ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனத்தினால் யாழ். மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற திட்டங்களை நேரில்சென்று பார்வையிட்ட பின்னர் நிறுவனத்தின் அதிகாரிகளிடம் மேற்கண்டவாறு அவர் தெரிவித்துள்ளார்.

(ஐ-10)

## கண்ணீர் அஞ்சலி

யாழ். பல்கலைக்கழக அரசறிவியற்றுறை
சிரேஷ்ட விரிவுரையாளரும் பட்டப்பின் படிப்பு
பொது நிர்வாகக் கற்கைநெறி இணைப்பாளருமான

**கலாநிதி அ.வே.மணிவாசகர்**
அவர்களின் அன்புத் தந்தையார்

அமரர் **அண்ணாமலை வேலாயுதபிள்ளை**
(இளைப்பாறிய ஆசிரியர்)

அவர்கள் 01.09.2000 அன்று இறைபதம் அடைந்ததையிட்டு அன்னாரின் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திப்பதோடு அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**மாணவர்கள்,**
**பட்டப்பின் படிப்பு - பொது நிர்வாகம்,**
**உயர் பட்டப்படிப்புகள் பீடம்,**
**யாழ். பல்கலைக்கழகம்.**

(77959)

## கண்ணீர் அஞ்சலி

யாழ். பல்கலைக்கழக சமூக அரசறிவியல் துறையின்
சிரேஷ்ட விரிவுரையாளர்
**கலாநிதி அ.வே.மணிவாசகர்**
அவர்களின் அன்புத் தந்தையார்
அமரர்
**அண்ணாமலை வேலாயுதபிள்ளை**
(இளைப்பாறிய ஆசிரியர்)

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**தலைவர்,**
**விரிவுரையாளர்கள், சக ஊழியர்கள்,**
*பொருளியல்துறை.*

*திருநெல்வேலி.* (77990)

## மரண அறிவித்தல்கள்

### அம்பலம் சொக்கலிங்கம்

நயினாதீவு 7ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், 5ஆம் வட்டாரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட அம்பலம் சொக்கலிங்கம் 01-09-2000 வெள்ளிக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் சின்னப்பிள்ளையின் அன்புக் கணவரும், சந்திரபாலன், மகேந்திரபாலன், சந்திரமலர், தர்மபாலன், பஞ்சலிங்கம், அசோகமலர் ஆகியோரின் அன்புத் தகப்பனாரும், உதயமலர், றஞ்சிதமலர், உதயகுமாரன், மீனா, கலைவாணி ஆகியோரின் அன்பு மாமனாரும், நாகமணி, சுப்பையா, செல்லம்மா, பழனிவேலு ஆகியோரின் அன்புச் சகோதரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (02-09-2000) சனிக்கிழமை நயினாதீவில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
சொ.சந்திரபாலன
(மகன்)

*நயினாதீவு.* (77960)

### லோறன்ஸ் அல்போன்ஸ்

கிளிநொச்சியைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், திருக்குடும்ப யாழ். மாகாண இல்லத்தில் பணிபுரிந்தவருமான லோறன்ஸ் அல்போன்ஸ் அவர்கள் நேற்று முன்தினம் (01-09-2000) வெள்ளிக்கிழமை அகால மரணமானார்.

அன்னாரின் நல்லடக்கம் இன்று (03-09-2000) ஞாயிற்றுக்கிழமை மாலை 3 மணியளவில் நடைபெறும் என்பதை அறியத்தருகின்றோம்.

தகவல்:
வீர்ஜினி (சகோதரி)
(மாகாண ஆலோசகர்)

*திருக்குடும்ப மாகாண இல்லம்,*
*யாழ்ப்பாணம்.* (77950)

### ஹெக்டர் பிரான்சிஸ்

கீரிமலை வீதி, பண்டத்தரிப்பைச் சேர்ந்த ஹெக்டர் பிரான்சிஸ் அவர்கள் 01-09-2000 அன்று கொழும்பில் காலமானார்.

அன்னார் மேபிள் (ஓய்வுபெற்ற ஆசிரியை) அவர்களின் அன்புக் கணவரும், அன்ரன் ஜித்தேந்திரன், றெஜினோல்ட், ரவீந்திரன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், துஷி, நிலாந்தி ஆகியோரின் மாமனாரும், சஜித், நிரோஜன் ஆகியோரின் பேரனும், மோர்ணிங் ஸ்டார் பேரின்பநாயகம், பிரான்சிஸ்கா றிச்சட், பற்றிமா அன்ரனி, யசிந்தா பொன்ராஜா ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் இன்று கொழும்பில் நடைபெறும்.

தகவல்:
யசிந்தா பொன்ராஜா

*கீரிமலை வீதி,*
*பண்டத்தரிப்பு.* (77969)

உ

எழுதுமட்டுவாழ் வடக்கு, மருதங்குளம்
அருள்மிகு மகா கணபதிப்பிள்ளையார் தேவஸ்தான விக்கிரம வருஷ

## மஹோற்சவ பெருவிழா - 2000

கிரியாகாலவிவரம்

நாளை (04.09.2000) திங்கட்கிழமை காலை 8.45 மணிக்கு கொடியேற்றத்துடன், தொடர்ந்து 10 தினங்கள் உற்சவம் நிகழும்.

மஹோற்சவப் பிரதம குரு: சிவாகம கிரியாகலாநிதி, கிரியாபானு, சிவாகம கிரியாசிரோன்மணி சிவப்பிரம்மஸ்ரீ ச. சோமாஸ்கந்தக் குருக்கள் (ஆலய பிரதமகுரு)

**- ஆலய தர்ம பரிபாலன சபை**

*எழுதுமட்டுவாழ்.* (77961)



உ

ஈவினை மத்தி அருள்மிகு

## ஸ்ரீ கற்பக விநாயகர் திருக்கோயில் மஹோற்சவ விஞ்ஞாபனம்

| | | | | |
|---|---|---|---|---|
| 03.09.2000 | ஞாயிற்றுக்கிழமை | காலை | 10.00 மணிக்கு | கொடியேற்றம் |
| 08.09.2000 | வெள்ளிக்கிழமை | மாலை | 04.00 மணிக்கு | வசந்த உற்சவம் |
| 10.09.2000 | ஞாயிற்றுக்கிழமை | மாலை | 05.00 மணிக்கு | வேட்டைத்திருவிழா |
| 11.09.2000 | திங்கட்கிழமை | மாலை | 05.00 மணிக்கு | சப்பறத்திருவிழா |
| 12.09.2000 | செவ்வாய்க்கிழமை | காலை | 10.00 மணிக்கு | தேர்த்திருவிழா |
| 13.09.2000 | புதன்கிழமை | காலை | 10.00 மணிக்கு | தீர்த்தத்திருவிழா |

மஹோற்சவ குரு:- சிவஸ்ரீ தியாக. கெங்காதரக் குருக்கள்

**- கற்பக விநாயகர் பரிபாலன சபை**

(77962)

# ஒலிம்பிக்கை குழப்புவதைத் தடுக்க ஆஸ்திரேலியாவில் கடும் சட்டங்கள்

## இராணுவத்துக்கும் அதிகாரம்

கன்பரா,செப்.3

**சிட்னி நகரில் எதிர்வரும் 15ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள ஒலிம்பிக் போட்டிகளைக் குழப்ப எடுக்கப்படும் நாசகாரச் செயல்களைத் தடுப்பதற்காகக் கடுமையான சட்டங்கள் ஆஸ்திரேலியாவில் அமுலுக்குக் கொண்டு வரப்படவுள்ளன.**

பயங்கர அச்சுறுத்தல்கள் மற்றும் ஏனைய வன்முறைகளுக்கு எதிராகக் கடும் நடவடிக்கைகளை எடுக்கும் அதிகாரத்தை இராணுவத்துக்கு வழங்கும் சட்டத்தை அமுல் செய்வது குறித்து ஆஸ்திரேலிய நாடாளுமன்றம் விவாதித்து வருகின்றது.

ஆஸ்திரேலியாவில் இம்மாதம் 15ஆம் திகதி சிட்னி ஒலிம்பிக் போட்டிகளும் உலகப் பொருளாதாரக் கட்டமைப்பின் மகாநாடும் நடைபெறவுள்ளன. இவ்விரு நிகழ்வுகளின்போதும் பாரிய ஆர்ப்பாட்டங்கள் நடைபெறலாம் என எதிர்பார்க்கப்படுவதால் இச்சட்ட மூலத்தை ஆஸ்திரேலிய நர்டாளுமன்றத்தின் மேற்சபை இவ்வாரம் ஏற்றுக்கொள்ளலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

ஆஸ்திரேலிய நாடாளுமன்றத்தின் கீழ்ச்சபை ஏற்கனவே இச்சட்ட மூலத்தை ஏற்றுக்கொண்டுள்ளதாகவும் ஆஸ்திரேலியாவில் ஆளும் கொன்சர்வேற்றிவ் கூட்டணிகளுடன் எதிர்க்கட்சியான தொழிலாளர் கட்சியும் இச்சட்டமூலத்தை ஆதரித்து வருவதாகவும் தெரியவருகிறது.

ஆஸ்திரேலியாவில் தற்போதுள்ள சட்டப்படி தேசிய அரசுக்கு கடும் அச்சுறுத்தல்கள் எழும் சமயத்திலேயே இராணுவத்தைப் பயன்படுத்த முடியும். எனினும் புதிய சட்டமூலப்படி ஒலிம்பிக் போன்ற போட்டிகள் நடைபெறும்வேளையில் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காக இராணுவத்தைப் பயன்படுத்த முடியும். புதிய சட்டமூலம் ஆஸ்திரேலிய இராணுவத்துக்கு மக்களைச் சோதனையிடவும், தடுத்துவைக்கவும், சொத்துக்களைக் கைப்பற்றவும், மிகக்கடுமையான சந்தர்ப்பங்களில் துப்பாக்கிப் பிரயோகம் செய்வதற்கான அதிகாரத்தையும் வழங்கியுள்ளது. ஆஸ்திரேலிய அரசாங்கம் கொண்டுவரவுள்ள புதிய சட்டமூலம் இராணுவத்தினர் மனித உரிமை மீறல்களில் ஈடுபட வழிவகுக்குமென மனித உரிமை ஆர்வலர்களும் சட்டவல்லுநர்களும் கவலை தெரிவித்துள்ளனர்.

1972 மூனிச் ஒலிம்பிக்கில் நடைபெற்றமை போன்ற சம்பவங்களைத் தடுப்பதற்காகவே ஆஸ்திரேலிய அரசு இச்சட்டமூலத்தைக் கொண்டு வருவதாகவும் பயங்கரவாத சம்பவங்கள் எதுவும் நடைபெறக்கூடாது என்ற அச்சத்தின் காரணமாகவே ஆஸ்திரேலிய அரசியல்வாதிகள் இச்சட்டமூலத்தை ஏற்றுகொள்ள முன்வந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றபோதிலும் ஆஸ்திரேலிய அரசு பழங்குடி மக்களின் ஆர்ப்பாட்டங்களைத் தடுப்பதற்காக இச்சட்ட மூலத்தைப் பயன்படுத்தக் கூடுமெனவும் அச்சம் வெளியிடப்பட்டுள்ளது.



நக்கீரன் கோபாலுடன் கன்னட நடிகர் ராஜ்குமார். காட்டில் இருந்து கடைசியாகக் கிடைத்த படங்களில் ஒன்று.

## மீண்டும் கிளறப்படும் டயானா-டோடி விவகாரம்





வாஷிங்ரன்,செப்.3

வேல்ஸ் இளவரசி டயானா மற்றும் அவரின் காதலர் டோடி அல்பெய்ட் ஆகியோரது மரணங்கள் தற்செயலான ஒரு கார் விபத்துச் சம்பவம் அல்ல என்று டோடி அல்பெய்ட்டின் தந்தை மொஹமட் அல்பெய்ட் குற்றஞ்சாட்டியுள்ளார். இது தொடர்பாக தனது சட்டத்தரணிகள் மூலம் செய்தியாளர் மாநாட்டை புதன்கிழமை கூட்டவிருந்த முஹமட் அல்பெய்ட், சி.ஐ.ஏ. தேசிய பாதுகாப்பு நிறுவனம் மற்றும் நீதி பரிபாலனத்துறை ஆகியவற்றுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யவும் நடவடிக்கை மேற்கொண்டிருந்தார்.

டயானா மற்றும் டோடி ஆகியோரிடையிலான தொலைபேசி உரையாடல்கள் மற்றும் ஒலிப்பதிவு நாடாக்கள் குறித்தும் செய்தியாளர் மாநாட்டில் வேண்டுகோள் விடுக்கப்படவிருந்தது. இதேவேளை - வழக்குத்தாக்ககல் செய்யப்படும்வரை இது தொடர்பாக கருத்து எதனையும் தெரிவிக்க மறுத்துள்ள சி.ஐ.ஏ. பேச்சாளர் மார்க் மான் பீல்ட் இவ்விடயத்தில் சி.ஐ.ஏயைத் தொடர்புபடுத்துவது நகைப்புக்கிடமான செயல் எனத் தெரிவித்துள்ளார்.

### முத்தத்தால் 'எய்ட்ஸ்' பரவும்

கம்பாலா,செப்.3

முத்தமிடுவதன் மூலம் எச்.ஐ.வி. வைரஸ் பரவக்கூடும் என்று பிரபல பிரெஞ்சு விஞ்ஞானி பேராசிரியர் மொன்டஸ் மெக் கண்டறிந்துள்ளார்.

உகண்டாவில் இடம்பெற்ற பயிற்சிக் கருத்தரங்கு ஒன்றில் பேசும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

முத்தத்தினால் ஏற்படக்கூடிய ஆபத்தைப் பல அறிஞர்கள் புறக்கணித்துள்ளனர். ஆனால் தீவிர முத்தத்தினால் பாதிப்பு ஏற்படுகின்றது என்பதை ஆராய்ச்சிகள் புலப்படுத்துகின்றன என்றும் -

முத்தம் இடுகையில் பரஸ்பரம் உமிழ்நீர் மூலம் எய்ட்ஸ் நோய் பரவக்கூடும் என்றும் -

அவர் மேலும் கூறினார்.

எய்ட்ஸ் நோய்க்குக் காரணமானது எச்.ஐ.வி. வைரஸ் என்பதைக் கண்டறிந்தவர் இவரே ஆவார். முத்தம் மூலம் எச்.ஐ.வி. பரவாது என்று இதுவரை கூறப்பட்டு வந்தது. (க)

## ஐ.நா. புத்தாயிரமாண்டு உச்சி மாநாட்டில் காஷ்மீர் பிரச்சினையை பாகிஸ்தான் கிளப்பும்

### இராணுவ ஆட்சியாளர் முஷாரப் அறிவிப்பு

இஸ்லாமபாத்,செப்.3

நியூயோர்க்கில் எதிர்வரும் 6ஆம் திகதி நடைபெறவுள்ள ஐ.நா. சபையின் புத்தாயிரமாம் ஆண்டுக்கான உச்சி மாநாட்டின்போது சர்சைக்குரிய காஷ்மீர் விவகாரம் குறித்து உலக நாடுகளின் கவனத்தை ஈர்க்கப்போவதாக பாகிஸ்தானின் இராணுவ ஆட்சியாளர் ஜெனரல் பெர்வேஷ் முஷாரப் தெரிவித்துள்ளார்.

இந்த மாநாட்டில் காஷ்மீர் பிரச்சினை குறித்தும் தெற்காசியாவின் சமாதானம் குறித்த பாகிஸ்தானின் கவலையையும் முஷாரப் வெளியிடுவார் என பாகிஸ்தான் வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

தெற்காசியாவில் அமைதி நிலவ வேண்டுமெனில் அது எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்கு சமாதானத் தீர்வு காணப்படவேண்டும் எனவும்-

தெற்காசியாவில் பதற்றம் நிலவுவதற்கு காஷ்மீர் தகராறே முக்கிய காரணமாக உள்ளதாக உலக நாடுகள் ஏற்றுக்கொண்டுள்ளதாகவும் -

பாகிஸ்தான் வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் மேலும் தெரிவித்தார்.

ஐ.நாவின் இந்த உச்சி மாநாட்டின்போது, பாகிஸ்தான் இராணுவ ஆட்சியாளர் அமெரிக்க ஜனாதிபதி பில் கிளின்ரனையோ, இந்தியப் பிரதமர் வாஜ்பாயையோ சந்தித்துப் பேசுவது சந்தேகமே எனவும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை -

இந்திய எல்லைக்குட்பட்ட காஷ்மீர் பகுதியில் இந்திய இராணுவத்தினர் மேற்கொண்டுவரும் சோதனைகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்து ஆயிரக்கணக்கானோர் ஆர்ப்பாட்ட ஊர்வலம் ஒன்றை மேற்கொண்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (க)

### முன்னாள் அமைச்சர் கொலைமுயற்சியில் உயிர் தப்பினார்

ஸ்ரீநகர்,செப்.3

ஷியா தலைவர்களில் முக்கியமானவரும் முன்னாள் மாநில அமைச்சருமான மௌலானா இஸ்புஸ்தர் குசைன் அன்சாரி கொலை முயற்சியில் இருந்து தெய்வாதீனமாக உயிர் தப்பினார். அவரது மெய்ப்பாதுகாவலரும், கார்ச்சாரதியும் உயிரிழந்தனர்.

ஸ்ரீநகரில் இவரது காருக்கு அடியில் தொலைவில் இருந்து இயக்கக்கூடிய குண்டு ஒன்றை தீவிரவாதிகள் வைத்து வெடிக்கச் செய்தனர். இதனால் முன்னாள் அமைச்சரின் மெய்ப்பாதுகாவலரும் கார்ச்சாரதியும் கொல்லப்பட்டனர். அமைச்சர் சிறுகாயங்களுடன் உயிர் தப்பினார்.

கடந்த மூன்று மாதங்களில் இவர் மீது மேற்கொள்ளப்பட்ட மூன்றாவது கொலை முயற்சி இதுவாகும். இச்சம்பவம் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. (க)

### ஒப்பந்தம் கைச்சாத்து

வாஷிங்ரன்,செப்.3

ஆயுதங்களைத் தயாரிப்பதற்குப் பயன்படுத்தப்படும் 68 தொன் புளூட்டோனியத்தை அழிப்பதற்கான ஒப்பந்தத்தில் அமெரிக்காவும் ரஷ்யாவும் கைச்சாத்திட்டுள்ளன.

ரஷ்யப் பிரதமரும் அமெரிக்கத் துணை அதிபரும் இந்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டனர். (க)

### பஸ் விபத்து

சென்னை,செப்.3

திருநெல்வேலி மாவட்டம் வள்ளியூருக்கு அருகே வான் ஒன்று சிறுவன் ஒருவன் மீது ஏறிய பின் திசை மாறி கிணற்றுக்குள் வீழ்ந்ததில் அதில் பயணம் செய்த 17 பேர் உயிரிழந்தனர். 8 பேர் காயமடைந்தனர். (க)

### கொலை முயற்சி தோல்வி

காட்மண்டு,செப்.3

நேபாளத்தில் அரசியல்வாதி ஒருவரைக் கொலை செய்யத் தீவிரவாதிகள் மேற்கொண்ட முயற்சி தோல்வியடைந்துள்ளது.

ஆளும் நேபாளக் காங்கிரஸ் கட்சியின் பொதுச் செயலாளர் சிசில் கொய்ராலாவைக் கொலை செய்யும் நோக்குடன் அவரது வீட்டில் குறித்த நேரத்தில் வெடிக்கும் குண்டை தீவிரவாதிகள் வைத்திருந்தனர். குண்டைக் கண்டுபிடித்த அவர் பொலீஸாருக்குத் தகவல் கொடுத்ததை அடுத்து அவர்கள் விரைந்து வந்து குண்டை செயலிழக்கச் செய்தனர். இதனால் தீவிரவாதிகளின் முயற்சி தோல்வியில் முடிந்தது. (க)

## பங்களாதேஷில் கடும் புயல் 150 மீனவரைக் காணவில்லை

சிட்டகொங்,செப்.3

பங்களாதேஷில் வெள்ளியன்று வீசிய கடும்புயலில் சிக்குண்ட சுமார் 150 மீனவர்கள் காணாமற்போயுள்ளனர்.

கடுமையான மழையும் கடற்கொந்தளிப்பும் காணப்படுவதால் இவர்கள் அனைவரும் உயிரிழந்திருக்கலாம் என அஞ்சப்படுகிறது. இவர்களது மூன்று உடல்கள் கடற்கரையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

கடுமையான மழை பெய்து வருவதால் 22 ஆயிரம் கிராமவாசிகள் கரையோரப் பிரதேசங்களிலிருந்து பாதுகாப்பான பகுதிக்கு அனுப்பப்பட்டுள்ளனர். சாண்டிப் தீவுப்பகுதியின் மூன்றில் இரண்டு பகுதி நீரில் மூழ்கியுள்ளதாக அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

பெரும்பாலான மக்கள் நீரில் மூழ்கியுள்ள தமது வீட்டின் கூரைகளில் ஏறியுள்ளனர். கடலின் நீர் மட்டம் வழமையை விட இரண்டு மீற்றர் வரை அதிகரித்துக் காணப்படுகிறது. இப்பகுதியெங்கும் கடல் நீரால் நிறைந்துள்ளதால் கிராமவாசிகள் குடிநீர் பிர்சினையை எதிர்நோக்கியுள்ளனர்.

குறைந்தது 2000 வீடுகளும் 10 ஆயிரம் ஏக்கர் பயிர்ச்செய்கை நிலமும் இவ்வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளன. இப்பகுதியிலுள்ள 100க்கும் மேற்பட்ட இறால் பண்ணைகளும் நீரில் மூழ்கியுள்ளன.

கடுமையான அலையினாலும் வீசும் புயலினாலும் சிட்டகொங் துறைமுகத்தின் செயற்பாடுகளும் பாதிக்கப்பட்டுள்ளன. (க-6)

## பிரதமர் வாஜ்பாய்க்கு அமெரிக்காவில் சிகிச்சை



புதுடில்லி,செப்.3

கடும் மூட்டு வலியால் அவதிப்படும் இந்தியப் பிரதமர் வாஜ்பாய்க்கு அமெரிக்காவில் சிகிச்சையளிக்கப்படவுள்ளது.

டாக்டர்களின் ஆலோசனையின் பேரில் கடந்த சில நாள்களாக வாஜ்பாய் பொது வைபவங்களைத் தவிர்த்து ஓய்வு எடுத்து வருகிறார்.

நியூயோர்க் நகரில் நடைபெறும் ஐ.நா. சபையின் புத்தாயிரம் ஆண்டு கூட்டத்தில் கலந்துகொள்ளப் பிரதமர் 5ஆம் திகதி அங்கு புறப்படுவதாக இருந்தது. தற்போது அந்தப் பயணம் இரு தினங்கள் ஒத்திவைக்கப்பட்டுள்ளது. எதிர்வரும் 7ஆம் திகதியே அவர் அமெரிக்கா செல்லவுள்ளார்.

அங்கு அவரது மூட்டு•வலிக்கு சிகிச்சை அளிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. நியூயோர்க் நகரில் உள்ள மவுண்ட் சினாய் என்ற ஆஸ்பத்திரியில் அவருக்கு சிகிச்சை அளிக்கப்படவுள்ளது. மூட்டு வலிக்கான பிரபல சிகிச்சை நிபுணர் ஏ.ரானாவத் பிரதமருக்கு சிகிச்சை அளிப்பார். சிகிச்சை முடிந்ததும் எதிர்வரும் 13ஆம் திகதி வாஜ்பாய் வாஷிங்ரன் செல்வார். அதன் பின் அமெரிக்க நிகழ்வுகளில் அவர் பங்கேற்பார் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-க)

## அமெரிக்கப் படையினரின் எச்சங்கள் வியட்னாமில் மீட்பு!

ஹனோய்,செப்.3

வியட்னாம் யுத்தத்தில் காணாமற்போன அமெரிக்கப் படையினரின் எச்சங்கள் கண்டுபிடிக்கப்பட்டிருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

நடவடிக்கையின்போது காணாமற்போனவர்கள் (M.I.A.) எனக் கருதப்படும் அமெரிக்க வீரர்களின் எச்சங்கள் ஐந்து மாகாணங்களில் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன.

இந்த எச்சங்கள் ஹனோயில் உள்ள அமெரிக்கத் தூதர் டெனிஸ் ஹார்ட்ரீடம் கையளிக்கப்பட்டதாக வியட்னாமின் உத்தியோகபூர்வ செய்தி நிறுவனம் தெரிவித்தது.

இந்த எச்சங்களில் பெரும்பாலானவை 1965, 1972 காலப்பகுதியில் விமான மோதல் அனர்த்தங்கள் நடந்த பகுதிகளிலேயே கண்டெடுக்கப்பட்டுள்ளன. (ஐ-க)

## சக்கரநாற்காலியில் இருந்து தவறி வீழ்ந்தார் "சுப்ப மான்"!

லொஸ்ஏஞ்சல்ஸ்,செப்.3

இந்திய தூரதர்ஷன் தொலைக்காட்சியில் ஒளிபரப்பாகும் சக்தி மானுக்கு வழிகாட்டியாக விளங்கியது 'சுப்ப மான்' தொடர். இந்த ரீ.வி. தொடரில் 'சுப்ப மானாக' நடித்தவர் கிறிஸ்தோபர் ரீவ்.

5 ஆண்டுகளுக்கு முன்பு குதிரையில் இருந்து விழுந்ததில் இவரைப் பக்கவாதம் தாக்கியது. இதனால் எழுந்து நடமாட முடியாமல் தவித்தார். அவர் சக்கரநாற்காலியில் வீட்டுக்குள் சுற்றி வந்தார். 2002ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் அவரது 50ஆவது பிறந்ததினம் ஆகும். அன்று எழுந்து நடக்கவேண்டும் என்று அவர் கனவு கண்டார். ஆனால் இந்தக் கனவு தவிடுபொடியாகும் வகையில் ரீவ், சக்கரநாற்காலியில் எழுந்திருக்கும்போது கீழே விழுந்தார். இதில் அவரது இடது கால் முறிந்தது. உடனே அவர் ஆஸ்பத்திரிக்கு கொண்டு செல்லப்பட்டார். அங்கு அவருக்கு சத்திரசிகிச்சை நடந்தது. அதற்குப் பிறகு அவர் தனி விமானம் மூலம் நியூயோர்க்கில் உள்ள வீட்டுக்குக் கொண்டுவரப்பட்டார். (ஐ-க)

# வெளிநாட்டில் பயிற்சி பெறுவதற்கு யாழ். ஆசிரியருக்கும் வசதி அளிக்கவும்

## தமிழர் ஆசிரியர் சங்கம் கோரிக்கை

வெளிநாடுகளில் நடைபெறும் அதிபர்கள், ஆசிரியர்களுக்கான பயிற்சிகளுக்கு யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்களும் அனுப்பப்படவேண்டும். இதற்கு வசதியாக அவர்களின் விவரங்கள் அடங்கிய பட்டியல் கணனிமயப்படுத்த வேண்டும் என்று இலங்கைத்தமிழர் ஆசிரியர் சங்கம் மாகாணக் கல்வி அமைச்சுச் செயலாளரிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

யாழ்ப்பாணம் வந்திருந்த மாகாணக்கல்வி அமைச்சுச் செயலாளர் க. பரமேஸ்வரனைச் சந்தித்துக் கலந்துரையாடிய சமயம் இந்தக் கோரிக்கையை அந்தச் சங்கம் விடுத்துள்ளது.

அந்தச் சங்கத்தின் சிரேஷ்ட துணைப் பொதுச் செயலாளர் த. பஞ்சலிங்கம், வேலணைக் கிளைத் தலைவர் பி. அருணகிரிநாதன், சண்டிலிப்பாய்க் கிளைத் தலைவர் எஸ். சிவநேசன், கோப்பாய் கிளைத்தலைவர் எம். விஸ்வலிங்கம், செயலாளர் எஸ். சின்னராசா, நல்லூர்க்கிளைச் செயலாளர் சு. கோகுலன் ஆகியோர் கொண்ட குழு இந்தச் சந்திப்பில் கலந்து கொண்டது.

இந்தச் சந்திப்பில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் வருமாறு:

★ அறிமுகப்படுத்தப்பட்டிருக்கும் புதிய கல்விச் சீர்திருத்தத்திற்கு அமைவாக நடத்தப்படும் சகல கருத்தரங்குகளையும் யாழ்ப்பாணத்தில் நடத்துவதற்கு வசதியாக திருகோணமலையில் இருந்து அதிகாரிகள் இங்கு வருகை தரல். புதிய கல்விச் சீர்திருத்தம் தொடர்பான சகல பாட நூல்களை குறிப்பிட்ட காலத்தில் இங்கு கிடைக்க ஆவன செய்தல்.

★ மாகாண மட்டத்தில் அமைக்கப்படவிருக்கும் ஆசிரிய இடமாற்ற சபை மூலம் ஐந்து வலயங்களுக்கிடையே ஆசிரிய ஆளணியினரைச் சமநிலைப்படுத்தல்.

★ வழங்கப்பட வேண்டிய 1998 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் தொடக்கம் ஜூன் மாதம் வரையிலான இடர்க்காலக் கொடுப்பனவை உடன் வழங்க நடவடிக்கை எடுப்பதாக உறுதியளிக்கப்பட்டது. அத்தோடு ஏற்கனவே வழங்கப்பட்ட இடர்க்காலக்கொடுப்பனவுகளில் அதிபர்களின் சம்பள உயர்ச்சிக்கு ஏற்ப பாக்கிப்பணத்தை வழங்கல்.

★ ஆசிரியர்களை புதிய ஆசிரிய சேவைக்குள் உள்வாங்கும் விடயத்தில் துரித நடவடிக்கை எடுப்பதற்கு வலயக்கல்விப் பணிப்பாளர்களுக்கு பணிப்பு விடுக்கப்பட்டுள்ளதென்றும் இதற்காக பாக்கிச் சம்பளத்தை வழங்க துரித நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் உறுதியளிக்கப்பட்டது.

★ அண்மையில் நடைபெற்ற இராணுவ நடவடிக்கையின்போது அகால மரணமடைந்த அதிபர்கள், ஆசிரியர்களுக்கான நஷ்டஈட்டுத் தொகை வழங்க உடன் நடவடிக்கை எடுக்கப்படும். (ஐ-3)


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 23 – 06 – 1930

மறைவு 16 – 09 – 1999

### அமரர் வாரித்தம்பி சின்னத்தம்பி (இரத்தினம்)

(இளைப்பாறிய பொலீஸ் உத்தியோகத்தர்)

ஆறாத் துயரில் ஆழ்த்தி விட்டு
மீளாத்துயில் கொள்ளும் அப்பாவே!
உங்கள் பிரிவால் வாடி வதங்குகின்றோம்.
அணையாத தீபமாய் காட்சி கொடுக்கின்றீர்களே!

உங்கள் ஆத்மா சாந்தியடைய சந்நிதி முருகனை இறைஞ்சுகின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

தற்காலிக முகவரி:
திருமகள் சோதி வீதி,
நெல்லியடி,
கரவெட்டி.

நிரந்தர முகவரி:
டச்சு வீதி,
சாவகச்சேரி வடக்கு.

(77941)



எமது உள்ளத்து அறையிலே
அமர்ந்திருக்கும் அன்புத் தெய்வத்தின்

## ஓராண்டு நினைவுகள்



### அமரர் ஆறுமுகம் சுப்பிரமணியம்

மண்ணில் ஏட்டில்
1939—09—01

தெய்வ வீட்டில்
1999—09—14

இரவிரவாய்க் கண்விழித்து உங்களின்பம் ஒதுக்கி அன்று அனலினிதாய்க் கண்டீர்கள். நாம் வளர வேண்டுமென்று, எங்களது வருங்காலம் சிறக்க என்று எத்தனையோ எண்ணமது வைத்தெம்மை வளர்த்தெடுத்த
தந்தை; நீங்கள்.
ஓராண்டு ஈராண்டு எனப் பலவாய்க் கழிந்திட்டாலும் நாம் வாழ்ந்து முடியும்வரை மறப்போமா தங்களை நாம்?
மறக்கமாட்டோம் அப்பா! தாங்கள் எம்மனதில்
இருக்கிறீர்கள்.
மறக்கமாட்டோம் எங்கள் கண்ணீர் உங்களையே
நினைத்திருக்கும்.

மனைவி, மக்கள்

தன்ன - சனபூமி,
காரைநகர்.

(77936)


## இறுதி நாள் நிகழ்வும் கண்காட்சியும்

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் நூலக வாரத்தின் இறுதி நாள் நிகழ்வும் கண்காட்சியும் எதிர்வரும் 6 ஆம் திகதி காலை 9.30 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் ஆரம்பமாகவுள்ளன.

கல்வியியற் கல்லூரியின் உப பீடாதிபதி பா. தனபாலன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக மூத்த எழுத்தாளர் சொக்கன், மூத்த எழுத்தாளர் 'புத்தொளி' சிவபாதம், நல்லூர் பிரதேச செயலரும் எழுத்தாளருமான கலாநிதி க. குணராஜா ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

கண்காட்சி காலை 9.30 மணி தொடக்கம் 4 மணிவரை நடைபெறும் என்று பீடாதிபதி தெரிவித்துள்ளார். (ஐ-10-73)

## வளர்ப்பு நாய்களுக்குத் தடுப்பூசி

யாழ்ப்பாணம், செப். 3

வலி. கிழக்குப் பிரதேச சபையின் உரும்பிராய் உப அலுவலகத்தினால் நாளை திங்கட்கிழமையும் மறுநாள் செவ்வாய்க்கிழமையும் வளர்ப்பு நாய்களுக்குத் தடுப்பூசி போடப்படவுள்ளது.

பொதுமக்கள் தங்கள் வளர்ப்பு நாய்களுக்குக் குறிப்பிட்ட தினங்களில் கீழ்காணும் இடங்களில் தடுப்பூசி போட்டுக் கொள்ளுமாறு உரும்பிராய் உப அலுவலகப் பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார்.

### திங்கட்கிழமை

காலை 9-10 மணி வரை ஊரெழு சர்வசக்தி ச.ச. நிலையம்

காலை 10.15-11.15 மணி வரை காந்தன் கலைவாணி ச.ச. நிலையம்

முற்பகல் 11.30 - 12.30 மணி வரை உரும்பிராய் கிழக்கு காந்திஜி ச. ச. நிலையம்

பிற்பகல் 1.30-2.30 மணி வரை உரும்பிராய் கிழக்கு சென். மைக்கல் ச. ச. நிலையம்

பிற்பகல் 2.45-3.45 மணி வரை உரும்பிராய் கிழக்கு செல்லப்பா ச. ச. நிலையம்

### செவ்வாய்க்கிழமை

காலை 9-10 மணி வரை உரும்பிராய் ஞானவைரவர் கோயிலடி ச. ச. நிலையம்

காலை 10.15-11.15 மணி வரை யோகபுரம் அண்ணா ச.ச. நிலையம்

முற்பகல் 11.30 - 12.30 மணி வரை செல்வபுரம் உதயசூரியன் ச.ச. நிலையம்

பிற்பகல் 1.30-2.30 மணி வரை உரும்பிராய் மேற்கு திருக்குமரன் ச.ச. நிலையம்

பிற்பகல் 2.45 -3.45 மணி வரை அன்னங்கை இளைஞர் ச. ச. நிலையம். (ஐ-10)

## 53 பாலர் ஆசிரியருக்கு பிரதேச சபை சம்பளம்

சுன்னாகம், செப். 3

வலிகாமம் தெற்குப் பிரதேச சபை இப்பிரிவில் உள்ள 53 பாலர் பாடசாலை ஆசிரியர்களுக்கு மாதாந்த சம்பளங்களை வழங்கி வருகிறது.

இப்பகுதிப் பாலர் பாடசாலை ஆசிரியர்கள் ஏற்கனவே நேர்முகப் பரீட்சையொன்றின் மூலம் தெரிவு செய்யப்பட்டு, மூன்று வகைகளில் தரம் நிர்ணயிக்கப்பட்டு இச்சம்பளம் வழங்கப்படுகிறது.

ஏ,பி,சி என்ற தரங்களில் முறையே ஆயிரம், 750, 600 ரூபா சம்பளப்பணம் இவர்களுக்கு வழங்கப்படுவதாகவும்—

இதற்கென 60 இலட்சரூபா நிரந்தர வைப்பிலிடப்பட்டு அதன்வட்டியில் இக்கொடுப்பனவு வழங்கப்படுவதாகவும்— வலி. தெற்குப் பிரதேச சபைத் தலைவர் தி.மா. செல்வராசா தெரிவித்தார்.

அண்மையில் பிரதேசசபை மண்டபத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியொன்றில் மேற்படி ஆசிரியர்களுக்கான நியமனக் கடிதங்களையும் அவர் வழங்கினார். அத்துடன் 42 சனசமூக நிலையங்களுக்கு ஆயிரம் ரூபா வீதமும், இரு சனசமூக நிலையங்களுக்கு 700 ரூபா வீதமும் நன்கொடைப் பணத்தையும் அவர் வழங்கினார்.

இந் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய பிரதேச சபை உறுப்பினர் த. அப்புலிங்கம் தனதுரையில்,— "எமது மழலைச் செல்வங்களின் ஆசிரியைகளுக்கு ஒகஸ்ட்மாதம்முதல்மாதாந்த உதவிப் பணம் வழங்கி 'அ' படிப்புக்கு அத்திவாரம் இடும் நிகழ்வானது எந்தவொரு பிரதேச சபையும் செய்யாத மாபெரும் சைக்கரியமாகும்" என்று தெரிவித்தார். (ஐ-27)

## 3, 8, 11 ஆம் தர மாணவருக்கு புதிய பாடநூல்கள் தயாரிப்பு

சுன்னாகம், செப். 3

புதிய கல்வி மறுசீரமைப்பின் கீழ் அடுத்த ஆண்டு 3, 8, 11 ஆகிய தரங்களுக்குப் புதிய பாட நூல்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.

இவை அடுத்த வருடம் விநியோகிக்கப்படும் போது, மாணவர்களிடமிருந்து இவ்வாண்டு உபயோகித்த நூல்களைத் திரும்பப் பெறத் தேவையில்லை என பதில் கல்வி வெளியீட்டு ஆணையாளர் ஆனந்த சிறிசேன அறிவித்துள்ளார்.

இதேவேளை —

ஏனைய தரங்களுக்கு விநியோகிக்கப்பட்ட பாடநூல்கள் தரங்கூடிய வகையில் அமைக்கப்பட்டுள்ளதால் அவை மூன்று ஆண்டுகளுக்குப் பயன்படுத்தப்படவேண்டும் எனவும் அவர் அறிவித்துள்ளார். (ஐ-27)

### காரைநகர் ப. நோ. கூ. சங்கம்

## 135 பயனாளிகளுக்கு சுழற்சி முறைக் கடன்

காரைநகர், செப். 3

காரைநகர்ப் பகுதியில் விவசாயம், கால்நடைவளர்ப்பு, வியாபாரம், தையல் போன்ற சுயதொழில் முயற்சிகளில் ஈடுபடும் 135 பயனாளிகளுக்கு இதுவரை காரைநகர் ப. நோ. கூ. சங்க கிராமிய வங்கி 18லட்சத்து 25 ஆயிரம் ரூபா நிதியினைக் கடனாக வழங்கியுள்ளது.

காலபோக நெற்செய்கையில் ஈடுபடும் மேலும் பல விவசாயிகளுக்கு அவர்கள் நெற்செய்கை மேற்கொள்ளும் நெற்காணிகளின் அளவிற்கேற்ப 15 ஆயிரம் ரூபாவரை கடனாக வழங்க உள்ளதாக காரைநகர் ப. நோ. கூ. சங்க பொதுமுகாமையாளர் க. நடராசா தெரிவித்தார்.

கடந்த ஆண்டு பிற்பகுதியில் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டம் காரைநகர் ப. நோ. கூ. சங்க கிராமிய வங்கிக்கு பத்து லட்சம் ரூபா நிதியினை வழங்கியிருந்தது. அந்த நிதியில் இருந்தே இது வரை சுழற்சி முறையில் 135 பயனாளிகளுக்கு 18 லட்சத்து 25 ஆயிரம் ரூபா வரை கடனாக வழங்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (ஐ-73)

## மாணவர்கள் பதிவு

கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் இவ்வாண்டு ஆசிரிய பயிற்சியினை மேற்கொள்வதற்காகக் கல்வி அமைச்சினால் மேலதிகமாக அனுமதி வழங்கிய 115 பேரில் 96 பேர் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை தமது பதிவுகளை மேற்கொண்டுள்ளனர்.

இதுவரை பதிவுகளை மேற்கொள்ளாத ஏனையோரை நாளை திங்கட்கிழமை பதிவுகளை மேற்கொண்டு அன்றைய தினமே விரிவுரைகளுக்கு சமுகமளிக்குமாறு கோப்பாய் ஆசிரிய கலாசாலை அதிபர் மு. பரஞ்சோதி அறிவித்துள்ளார். (ஐ-73)

உதயன்

## விதை நெல் தட்டுப்பாடு

காலபோக நெல்விதைப்புக்குத் தேவையான விதை நெல்லுக்கு குடாநாட்டில் தட்டுப்பாடு நிலவுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

குடாநாட்டு விவசாயிகள் காலபோக நெல் விதைப்பை அனேகமாக இந்த மாத நடுப்பகுதியில் ஆரம்பிக்க வேண்டும். காலபோக நெல் விதைப்புக்குத் தேவையான மொட்டைக்கறுப்பன், 'பெரிய வெள்ளை' மற்றும் 'எச்-4' விதை நெல் வர்க்கங்களுக்குத் தட்டுப்பாடு நிலவுவதால் விவசாயிகள் உரிய நேரத்தில் நெல் விதைப்பை மேற்கொள்ள முடியாமற் போகலாம் என்று அஞ்சப்படுகிறது. இதனால் குடாநாட்டின் நெல் தேவையையும் கணிசமான அளவு நிறைவு செய்யப்படாது போகலாம்.

வழமையாக விவசாயிகள் முதல் ஆண்டில் பெற்ற உற்பத்தியில் இருந்து விதை நெல்லைச் சேமித்து வைத்தே அடுத்த ஆண்டில் பயன்படுத்துவார்கள்.

ஆனால் கடந்த ஆண்டு மழை பிந்திப் பெய்ததால் விவசாயிகள் பெரும் அழிவைச் சந்திக்க நேரிட்டது. விதை நெல்லைக்கூட அவர்களினால் சேகரித்து வைக்க முடியாது போயிற்று. தற்பொழுது குடாநாட்டில் விதை நெல்லுக்கு ஏற்பட்ட தட்டுப்பாட்டுக்கு இதுதான் பிரதான காரணம் என்று கூறப்படுகிறது.

தற்போதைய அசாதாரண நிலையில் கொழும்பில் இருந்து விதை நெல்லைப் பெற்று விவசாயிகளுக்கு வழங்க முடியுமா என்பதும் சந்தேகமே. விதை நெல்லைத் தருவிக்க முயற்சி எடுக்கப்பட்டாலும் உரிய காலத்தில் விதை நெல் வந்து சேராவிட்டால் காலம் பிந்தியே விதைக்க வேண்டி ஏற்படும். இப்படியான நிலையில் இந்த ஆண்டும் மழையினால் நெற்பயிர்கள் அழிந்து போகும் ஆபத்து உருவாகலாம்.

கடந்த காலங்களில் குடாநாட்டில் மாரிமழை உரிய காலத்தில் பெய்துவந்தது. விவசாயிகள் குறிப்பிட்ட மாதத்தில் நெல்லை விதைத்து உரிய நேரத்தில் அறுவடை செய்து வந்தனர்.

ஆனால் கடந்த சில வருடங்களாக மாரிமழை முந்தி அல்லது காலம் பிந்திப் பெய்வதே விவசாயிகள் எதிர்நோக்கும் சவால் ஆகும். ஏற்கனவே யுத்த சூழ்நிலை காரணமாக ஆயிரக்கணக்கான ஏக்கர் நெல் வயல்கள் விவசாயம் செய்ய முடியாது கைவிடப்பட்டுள்ளன.

விவசாயம் செய்த வயல்களில் கூட நெல்லை அறுவடை செய்ய முடியாது விவசாயிகள் பெரும் நஷ்டம் அடைந்தனர். தற்பொழுது போதூக்குறைக்கு விதை நெல்லுக்கும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

தற்போதைய பிரச்சினையில் விவசாயிகளுக்கு உதவும் பொறுப்பு விவசாயத் திணைக்களத்துக்கே உண்டு. முன்னைய காலங்களைப் போன்று அன்றி காலநிலை மாறி வருவதால் காலநிலை மாற்றங்களை அவதானித்து ஆய்வு செய்து தேவையான ஆலோசனைகளை விவசாயிகளுக்கு வழங்க வேண்டும்.

அத்துடன் விதை நெல் தட்டுப்பாட்டுப் பிரச்சினை திடீரென்று ஏற்பட்டது ஒன்றல்ல என்பதால் விவசாயிகளுக்கு விதை நெல்லைத் தருவித்துக் கொடுக்க முன்னதாகவே நடவடிக்கை எடுத்திருக்கலாம். சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு இது சமர்ப்பணம்.

# 83 கலவரத்துக்காக உங்களிடம் நாம் மன்னிப்புக் கோருகின்றோம்!

## 'றுகுணு' மக்கள் கட்சிப் பிரமுகர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,செப்.3

1983ஆம் ஆண்டு நடந்த இனக் கலவரத்தை எமது கட்சி வன்மையாகக் கண்டிக்கின்றது. சிங்கள இனவாதிகளால் மேற்கொள்ளப்பட்ட இந்தக் காடைத் தனத்தால் தமிழர்கள் மிகவும் பாதிக்கப்பட்டனர். இந்தச் செயலுக்காக சிங்கள மக்கள் சார்பில் தமிழர்களிடம் நாம் மன்னிப்புக் கேட்கின்றோம்.

றுகுணு மக்கள் கட்சியின் செயலாளர் எச்.ஓ.அருண சொயிசா இவ்வாறு தெரிவித்தார்.

யாழ்.மாவட்டத்தில் போட்டியிடுவதற்கான வேட்பு மனுத் தாக்கல் செய்வதற்காக நேற்று முன்தினம் தனது குழுவினருடன் யாழ்.வந்த அவர் தமது வேட்புமனுவைத் தாக்கல் செய்த பின் செய்தியாளர் மத்தியில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

சிங்கள மக்கள் இனவாதிகள் அல்லர் என்பதை உலகறியச் செய்வதற்காகவே நாம் யாழ்.மாவட்டத்தில் போட்டியிடத் தீர்மானித்தோம்.

சிலசமயம் நாடு இரண்டாகப் பிரியும் நிலை ஏற்பட்டாலும், அவ்வாறு பிரிக்க வேண்டாம் என்று நாம் தமிழ் மக்களைக் கேட்டுக் கொள்கின்றோம்.

சிங்கள மக்களுக்கு இருக்கும் மத, மொழி மற்றும் கலாசாரத்தைப் பேணும் உரிமைகள் போன்று தமிழ் மக்களுக்கும் அவர்களின் மத, மொழி மற்றும் சகல உரிமைகளும் இருக்க வேண்டும். தமிழர்களின் உரிமைகள் உரிய முறையில் பேணப்பட வேண்டும் என்பதில் நாம் உறுதியாக நிற்கினறோம்.

இந்தச் சந்தர்ப்பத்தில் விடுதலைப் புலிகளுக்கு ஒரு தகவலைச் சொல்ல விரும்புகின்றேன். இலங்கை துண்டாடப்படாது, ஒரே இலங்கையின் கீழ் - ஒற்றை ஆட்சியின் கீழ் - பிரச்சினைகளைத் தீர்க்க விரும்புகின்றோம். ஒன்றுபட்ட இலங்கைக்குள் பேச்சுக்கள் மூலம் பிரச்சினைகளைத் தீர்க்க நாம் தயாராக உள்ளோம். உங்களுக்கு வேண்டிய அதிகாரங்களைப் பெற்றுக் கொள்ளுங்கள்; ஆனால் ஒற்றை ஆட்சியின் கீழ் அது அமைய வேண்டும் என விரும்புகின்றோம்.

வடக்கிலோ தெற்கிலோ, அல்லது எந்த நாட்டிலோ யுத்தம் இடம்பெற்றாலும், யுத்தத்தால் தாய்மார் சிந்தும் கண்ணீர் ஒரே மாதிரியானவையே அவற்றில் வேறுபாடு இருக்காது. இலங்கையில் யுத்தம் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும்.

வடக்கிலுள்ள மண் சிங்களவர்களுக்கோ அல்லது தமிழர்களுக்கோ சொந்தமானதல்ல. இந்த மண் நாட்டின் சகல மக்களுக்கும் சொந்தமானது. அதேபோன்று முழு இலங்கையும் இங்கு பிறந்த சகல மக்களுக்கும் சொந்தமானது. இவ்வாறு எண்ணுமாறு தமிழ் மக்களிடம் நாம் கேட்டுக் கொள்கின்றோம் - என்றார்.

### பிரஜைகள் முன்னணி

பிரஜைகள் முன்னணியின் முதன்மை வேட்பாளர் கந்தையா மகாலிங்கம் தெரிவித்ததாவது:-

கைது செய்யப்பட்டு களுத்துறைச் சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் தமிழ் இளைஞர்கள் அங்கு மிகவும் சித்திரவதைகளுக்கு உள்ளாக்கப்பட்டு வருகின்றனர். சித்திரவதைகள் நிறுத்தப்பட வேண்டும்; நீண்ட காலமாக தடுத்து வைக்கப்பட்டிருக்கும் தமிழ் இளைஞர்கள் விடுவிக்கப்பட வேண்டும்.

பால்மா மற்றும் போசாக்கு உணவுக்காகத் தவிக்கும் ஏழை மக்களுக்குச் சேவை செய்வதற்காக பிரேமதாஸாவின் கொள்கையைக் கடைப்பிடிக்கும் சிறி சேன குரேயின் கட்சியின் கீழ் யாழ். மாவட்டத்தில் எமது கட்சி போட்டியிட உள்ளது - என்று தெரிவித்தார்.

### ஜே.வி.பி.

யாழ்.மாவட்டத்தில் போட்டியிடும் ஜே.வி.பி. உறுப்பினர் செல்லையா நடராசா கூறியதாவது:-

யாழ்.மாவட்ட மக்களின் வாக்குகள் மூலம் நாடாளுமன்றம் வரும் சில தமிழ்க்கட்சிகள் அந்த மக்களைப் பாதிக்கும் அவசரகாலச் சட்டத்துக்கு உடந்தையாக வாக்களிக்கின்றன.

ஆனால் ஜே.வி.பி. இயக்கம் கடந்த 94ஆம் ஆண்டு தொடக்கம் இன்று வரை நாடாளுமன்றத்தில் அவசரகாலச் சட்டத்துக்கு எதிராகவே வாக்களித்து வந்துள்ளது. எதிர்காலத்திலும் ஆதரவளிக்காது.

இங்கு ஒடுக்கப்பட்ட மக்கள் மேலும் ஒடுக்கப்படுகின்றார்கள், சாதாரண மக்கள், தொழிலாளர்கள் மட்டுமன்றி சிங்கள, தமிழ்,முஸ்லிம் மக்கள் அனைவருமே அவசரகாலச் சட்டத்தால் பாதிக்கப்படுகின்றனர்.

ஒடுக்கப்பட்ட மக்கள் எங்கெங்கு இருக்கிறார்களோ அவர்களுக்கு ஜே.வி.பி. ஆதரவு வழங்கும். தமிழ் மக்களின் ஆதரவு ஜே.வி.பிக்கு என்றும் உள்ளது. கடந்த 82ஆம் ஆண்டில் கூட பெருமளவான தமிழ் மக்களின் வாக்குகள் எமக்கு கிடைத்தன - என்று தெரிவித்தார்.

(ஐ-9)

# சந்தேக நபர்களைப் பிடிக்கச் சென்ற பொலீஸ் சார்ஜென்ட் விழுந்து காயம்

திருட்டுச் சந்தேக நபர்களைக் கைது செய்யச்சென்ற பொலீஸ் சார்ஜென்ட் ஒருவர் தவறிவிழுந்து கை முறிந்த நிலையில் மந்திகை மருத்துவ மனையில் சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

இந்தச்சம்பவம் கடந்த ஞாயிற்றுக்கிழமை காலை அல்வாய் வடக்குத்திடல் பகுதியில் இடம்பெற்றது.

வடமராட்சிப் பகுதியில் அண்மைக் காலமாக வீடுகளிலும், கடைகளிலும் திருட்டுக்களில் ஈடுபட்டு வந்ததாகக் கூறப்படுபவர்களைச சுற்றிவளைத்துப் பிடிக்க பருத்தித்துறைப் பொலீஸார் அப்பகுதிக்குச் சென்ற சமயம் சந்தேக நபர்கள் ஓடமுற்பட்டனர் என்றும் அவர்களைப் பின் தொடர்ந்து ஓடிய பருத்தித்துறை பொலீஸ் நிலைய சார்ஜன்ட் கே. ஜயதிஸ்ஸ என்பவரே,தவறி விழுந்து இடது கைமுறிந்த நிலையில் மந்திகையில் அனுமதிக்கப்பட்டார் என்றும் -

இதேவேளை தப்பி ஓட முற்பட்டதாகக் கூறப்படும் சந்தேக நபர்களான வேலாயுதம் - சந்திரன் (வயது 28) சின்னத்தம்பி-கமலராஜா (வயது 32) ஆகிய இருவரையும் பொலீஸார் அப்பகுதியில வைத்து சந்தேகத்தின் பேரில் கைது செய்திருந்தனர்.

குறித்த சந்தேக நபர்கள் இருவரும், மறுநாள் திங்களன்று பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்ட சமயம் இம்மாதம் 4ஆம் திகதிவரை இவர்களை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் எஸ்.ஏ.ஈ.ஏகநாதன் உத்தரவிட்டார்.

(இ-109)

### ஓய்வூதியத்துடன் அதிகரித்த கொடுப்பனவு

உள்ளூராட்சித் திணைக்கள ஓய்வூதியர்களுக்கு அதிகரித்த விசேட படியான 300 ரூபா இந்த மாத ஓய்வூதிய வவுச்சரில் சேர்க்கப்பட்டுள்ளது.

இந்த ஓய்வூதியர்களின் ஓய்வூதிய வவுச்சர்கள் தபால் நிலையங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளன.(ஐ-117)

### விளக்க மறியல்

நெல்லியடி,செப்.3

வடமராட்சிப்பகுதியில், வீடொன்றிலிருந்து 6 கோழிகளைத் திருடிய சந்தேகநபர் ஒருவரை ஒக்டோபர் 23ஆம் திகதிவரை விளக்க மறியலில் வைக்குமாறு பருத்தித்துறை மாவட்ட நீதிவான் எஸ்.ஏ.ஈ.ஏகநாதன் உத்தரவிட்டார்.

இந்தத் திருட்டுச் சம்பவம் தொடர்பாக பருத்தித்துறை பொலீஸாரினால் சந்தேகத்தின்பேரில் கைது செய்யப்பட்ட அல்வாய் வடக்கு திடலைச் சேர்ந்த கந்தசாமி ரமேஸ்குமார் (வயது 26) என்பவர் கடந்த திங்களன்று நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டார்.

சந்தேகநபர் குற்றத்தை ஒப்புக் கொண்டதை அடுத்து 2 ஆயிரத்து 500 ரூபா அபராதமாகச் செலுத்துமாறு நீதிவான் உத்தரவிட்ட போதிலும் அவர் அபராதத் தொகை செலுத்தும் நிலையில் இல்லாதமையினாலே விளக்கமறியலில் வைக்குமாறு பணித்தார். (இ-109)

### மா பெற மக்கள் அலைச்சல்

தென்மராட்சி,செப்.3

தென்மராட்சி கிழக்குப்பகுதியில் தங்கியுள்ள பளைப் பகுதி மக்கள் இப்பகுதியில் இயங்கும் கொடிகாமம் பலநோக்குக் கூட்டுறவுச்சங்கக் கிளைக் கடைகளில் மா பெற முடியவில்லை எனவும், மா வாங்குவதற்காக 10 மைலுக்கு அப்பால் உள்ள வடமராட்சிக்கு வரவேண்டியுள்ளது எனவும் தெரிவித்தனர்.

பங்கீட்டு அட்டைக்கு மா வாங்குவதாயினும் வடமராட்சிக்கு வர வேண்டியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-117)

### புதிய கொல்களம் அமைக்கப்படும்

வடமராட்சி,செப்.3

பருத்தித்துறை நகரசபை புதிய கொல்களம் ஒன்றை அமைக்கவுள்ளது.

தற்போது மூன்றாம் குறுக்குத் தெருவிலுள்ள கொல்களத்துக்குப் பதிலாக புதிய கொல்களம் ஒன்றை அமைக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

புதிய கொல்களத்தை முனை வெளிச்சவீட்டுப்பகுதியில் அமைக்க ஆலோசிக்கப்பட்டு வருகின்றது.

(ஐ-173)

### முத்திரை தட்டுப்பாடு

வடமராட்சி,செப்.3

வடமராட்சிப்பகுதிகளில் உள்ள தபாலகங்களில் முத்திரை வகைகள், வான்கடிதம் என்பவற்றிற்குப் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. இவற்றைப் பெறுவதற்கு பொதுமக்கள் பெரும் சிரமப்படுகின்றனர்.

(ஐ-173)

# தான் யார் என்பதைக் கண்டு கொள்பவரே இறைவன் யார் என்பதைக் காண முடியும்

இறைவனுக்குள் அன்பானவர்களே! ஆதியாகமம் 4:13 - "காயீன் ஆண்டவரிடம், எனக்குக் கொடுக்கப்பட்ட தண்டனை என்னால் தாங்க முடியாததாக இருக்கின்றது" - என்றான்.

காயீன், ஆபேல் இருவரும் சகோதரர்கள். இருவரும் ஆண்டவருக்குக் காணிக்கை படைக்கின்றார்கள். ஆபேலது காணிக்கை இறைவனால் ஏற்றுக் கொள்ளப்படுகின்றது. காயீனின் காணிக்கையோ நிராகரிக்கப்படுகின்றது. இதனால் பொறாமை கொண்ட காயீன் தன் சொந்தச் சகோதரனையே கொலை செய்கிறான்.

அப்பாவிகளின் கூக்குரல் எப்போதும் இறைபாதம் சென்றடையும் என்பதால் ஆபேலது கூக்குரல் இறையண்டை செல்கிறது. இறைவனது வினாவுக்கு "என் சகோதரனுக்கு நான் காவலாளியோ?" என்று கேட்பதன் ஊடாக தனக்கு இறைவன் தந்த பொறுப்புக்களை உதாசீனம் செய்கிறான் காயீன்.

இதனால் தனது படைப்புக்களில் ஒருவன் உதாசீனம் செய்யப்படுவதை வெறுமனே பார்த்துக் கொண்டிருக்க மாட்டாதவரான இறைவன் கோபமடைந்து, காயீனுக்குத் தண்டனை தர முற்படுகின்றார். அப்போது தான் மேற்கண்ட வசனத்தை காயீன் ஆண்டவரிடம் கூறுகின்றான். தனக்குக் கொடுக்கப்படுவது 'தண்டனை' என்று எப்போது அவன் ஆண்டவரிடம் கூறுகிறானோ, அப்போதே தான் செய்தது குற்றம் என்பதைக்காயீன் உணர்ந்து விட்டான் என்பதே அர்த்தமாக உள்ளது. ஏனெனில் நீதிமன்றங்களில் யாருக்குத் 'தண்டனை' கொடுப்பார்கள்? குற்றம் புரிந்தவனுக்கே தான். எனவே, காயீன் தனது குற்றத்தை உணர்ந்து கொண்டதால் 'தண்டனை'க்குத் தப்பித்துக் கொள்கிறான்.

**ஞாயிறு நற்பிரசாதம்**

வேதாகமத்தில் யோபு என்னும் உத்தமமான மனிதன் தனது வாழ்க்கையில் சகலத்தையும் இழந்தான். ஆனால் தனது மனச்சாட்சியின்படி தான் நீதிமான் என அவன் நம்பினான். அதனால் இரட்டிப்பான நன்மைகளை அடைந்தான். எனவே நாம் எமது மனச்சாட்சிப் படி குற்றவாளிகளா?, நீதிமான்களா? என்பதனைக் கண்டுணர வேண்டும்.

பாரம்பரிய வழக்கின்படி கைகழுவிச் சாப்பிடாத இயேசுவின் சீடர் மீது பரிசேயர் குற்றம் பிடித்தபோது "உள்ளச்சுத்தமே முக்கியம் உடற்சுத்தமல்ல" என நவின்றார் இயேசு. தமது குற்றத்தை மறைக்க முயல்பவர்கள் மற்றவர் மீது எப்போதும் குற்றம் காண முயல்வர். "என்னிடம் மட்டுமே நிறைவு உள்ளது: மற்றவர்கள் மீது குறைவு மட்டுமே உள்ளது. என்னிடம் குறைவே இல்லை. மற்றவர்களிடம் நிறைவே இல்லை" என்று சொல்பவர்கள் யாவரும் சுற்றவாளிகள் அல்லர். அவர்களிடம் ஏதாவது ஒரு குறைவு உள்ள படியால்தான் அவர்கள் மற்றவர்கள் மீது குற்றம் காண முயல்கிறார்கள்.

இயேசு பந்தியில் இருந்த போது ஒரு விபசாரி தைலக் குப்பி ஒன்றைக் கொண்டுவந்து தனது கண்ணீராலும், தைலத்தாலும் அவரை நனைக்கிறாள். அப்போது ஏனையவர்கள் முறுமுறுக்கிறார்கள். ஆனால் இயேசுவோ; அவளை ஆசீர்வதித்து அனுப்புகிறார். ஏனெனில் தாம் குற்றவாளிகள் என்பதனை உணர்ந்து கொண்டு இறைவனண்டை வருபவர்கள் இறை மன்னிப்பை மட்டுமல்ல அவரது ஆசீர்வாதத்தையும் பெற்றுக் கொள்கின்றனர். ஏனெனில், மனித நீதியிலும் பார்க்க இறை நீதி வித்தியாசமானதாகவும், உயர்ந்ததாகவும் உள்ளது!

வேதாகமத்தில் யோவான் ஸ்நானகனின், பவுலின், ஸ்தேவானின் அருளுரைகளைக் கேட்டபலர் மனச்சாட்சியால் குத்தப்பட்டனர் எனக் காண்கின்றோம். எமது மனச்சாட்சி எம்மை நல்லவராகவா கெட்டவராகவா அடையாளப்படுத்துகின்றது; பவுல் அடிகளார் இறைவனை அறிய முன்பு தான் கல்விமான், சிறந்த யூதன், நியாயப் பிரமாணத்தின்படி குற்றஞ் சுமத்தப்படாதவன் என மமதையான சிந்தனைகளைத் தனக்குள் கொண்டிருந்தார்.

**அருள்திரு. பி.தேவதாஸ்**

ஆனால் இறைவனது ஒளியைக் கண்டபின்தான் அற்பமும் குப்பையும் தூசியும் என உணர்ந்தார். அந்த உணர்தல் தான் வேதாகம வரலாற்றில் அவரது பெயர் பொறிக்கப்படக் காரணமாய் அமைந்தது.

எனவே எமது மனச்சாட்சியின்படி நாம் நல்லவரா? கெட்டவரா? என உய்த்துணர்ந்து எம்மைத் திருத்திக் கொள்வோமா?

சிந்திப்போம்!செயற்படுவோம்!!!

**உதயவாக்கு**

வாழ்க்கை வெறும் விளையாட்டு அல்ல. பெரிய கோட்டை கட்டுவது அருமை; இடிப்பது எளிமை. அறுபது ஆண்டு ஒற்றுமையாக வாழ்ந்த வாழ்க்கையை ஒரு சிறுமனம் - பொல்லாதமனம் பிரித்துப் பாழாக்கி விடும்.

- மு.வ

**நாளை**

ஆவணி 19

திங்கட்கிழமை

*திதி:* ஷஷ்டி முற்பகல் 11.45 வரை


*நட்சத்திரம்:* விசாகம் மாலை 6.29 வரை

*சுபநேரம்:* 12.04 - 1.34

*ராகுகாலம்:* 7.34 - 9.04

(இவை பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)


# கொலைகார



ஆபிரிக்க வான்வகை தேனீக்கள்.

## பூச்சிகள் கொலைகாரர்களா?


தலைப்பு பொருத்தமானதா? மனிதக்குணம் இந்த தலைப்பிற்கு ஆதரமாக அமைந்து விட்டதா? உணவுக்காகப் பிறஇனங்களைக் கொல்வது கொலையாகுமா? உணவுக்காகத் தம்மினத்தையே கொல்வது கொலையாகுமா? பாலினப் போரில் ஏற்படும் விபத்துக்கள் கொலைக் குற்றத்திற்கு உள்ளாகுமா? வேட்டையென்றும், விளையாட்டென்றும் (SPORT) மனிதன் விலங்குகளைக் கொன்றுகுவிக்கின்றானே! இதுவெல்லாம் கொலையில்லையா? அரசுகள் தம்மை எதிர்ப்பவர்களை வேண்டாதவர்கள், ஆபத்தானவர்கள் என குறிசூட்டி நீதிவிசாரணைகள்(?)



சாதாரண குளவி (COMMON WASP)

நடத்தி முடித்துவிடுகிறார்களே! இந்த வித உயிர்ப்பறிப்பு எவ்வகையைச் சாரும்? 'கொலை' என்ற பதத்தின் வரைவிலக்கணம் என்ன? வரைவிலக்கணத்தை வரையறுத்தது யார்? ஆடு, மாடு, பன்றி, கோழி, மீன் என்று பல அங்கிகள் மனிதனின் இரைப்பையில் தஞ்சமடைகின்றனவே! கொல்லாமலா மனிதன் இவற்றைப் புசிக்கின்றான்? இங்கு கொலைக் குற்றத்திற்குரியவன் உண்பவனா அல்லது தருபவனா(SUPPLIER)? சிந்திக்கவே தலை சுற்றுகிறது. அதனால் இக்கேள்விகளுக்கு முற்றுப்புள்ளி வைத்து, பூச்சிகளின் உலகத்தில் சற்றே நுழைந்து பார்ப்போம்.

பூச்சிகள் எல்லாம் கொலைகாரர் அல்ல. சூழலுக்கும் மனிதனுக்கும் நன்மை பயக்கும்



பெருங்குளவி (HORNET)

பல பூச்சியினங்களுமுண்டு.

அறக்கினிட்டுக்கள் (ARACANIDS) சிறப்பாகச் சிலந்திகள் இல்லையென்றால், உலகமே பூச்சிகள் மயமாகப் போயிருக்கும். ஏனையவை எல்லாம் வாழ்க்கைப்போரில் ஒதுங்கியிருக்கும். மனிதஇனமென்ன, பாலூட்டிகளே தோன்றாது போயிருக்கலாம். இயற்கையன்னையின் விளையாட்டைப் புரிந்து கொள்வது மிகக் கஷ்டம்.

## உலகத்தை ஆள்வது யார்?

மனிதன்தான் உலகை ஆள்கின்றான் என்று நாம் நினைக்கின்றோம். இது தவறு. புவிக்கோளின் உயிரின மண்டலம் பூச்சிகளுக்குரியது. அவையே அதை ஆளுகின்றன. அங்கிகளிலே விவேகமுள்ளவன் மனிதன் என்பது உண்மை தான். ஆனால் வாழ்க்கைப் போரில் முழுமையாக வெற்றி கண்டவன் மனிதனா? மேலும் உடல் அளவுடன் மூளையின் அளவை ஒப்பு நோக்கிப் பார்த்தால் தேனீ, எறும்பு போன்றவற்றின் மூளை மனிதமூளையைக் காட்டிலும் பல மடங்கு பெரியது! அத்துடன் பல மில்லியன்கள் பூச்சியினங்கள் உண்டு. பூச்சிகள் இல்லாத வாழ்விடங்களே இல்லை. ஒரு ஹெக்ரயர்(HECTARE) தோட்ட நிலத்தில் இரண்டு லட்சம் தனியன்கள் இருக்கும். ஒரு தனிக்கூட்டமாகப் பூச்சிகள் நிலம், நீர், வளி ஆகியவற்றையெல்லாம் ஆக்கிரமித்துள்ளன. இவற்றையெல்லாம் மனிதன் மனதில் இருத்திக்கொள்வது நல்லது.

நாம் சாதாரணமாக சிலந்திப் பூச்சி என்று அழைக்கின்றோம். சிறு பிள்ளைகளுக்கு அதனை 'எட்டுகாற்பூச்சி' என்று சொல்லிக் கொடுக்கின்றோம். ஆனால் சிலந்திகள் வேறு, பூச்சிகள் வேறு. இக்கட்டுரையில் ஒப்பீட்டு முறையிலும் இவை ஆராயப்படுகின்றன. (தலைப்பு சற்றே பிசகிவிட்டது போலும்!)

### மூட்டுக்காலிகள்

பூச்சிகளும் மற்றும் பல அங்கிகளும் ஆத்திரப்பொட்டுக்கள் (ARTHROPODS) - அதாவது மூட்டுகாலிகள் - என அழைக்கப்படும். ஆத்துறோஸ் என்றால் மூட்டு; போடோஸ் என்றால் கால். ஆத்திரப்போடா, விலங்கு இராச்சியத்தில் ஒரு பெரிய கணம். இக்கணத்திற்குரிய அங்கிகள் துண்டுபட்ட உடலையும், துண்டுபட்ட கால்களையும் உடையவை. அதனால் உடலிலும் கால்களிலும் பலமூட்டுக்கள் இருக்கும். இக்கணத்திற்குரியவை கியூற்றினேற்றம் பெற்ற உடற்போர்வையை உடையவை (உ+ம்: பூச்சிகள், சிலந்திகள் போன்றவை). சிலவற்றில் புறத்தோல் கல்சியம் காபனேற்று ஏற்றமும் பெற்றிருக்கும். (உ+ம்: இறால்கள், நண்டுகள் போன்றவை). இத்தகைய போர்வை இவற்றின் வளர்ச்சிக்குத் தடையாகவிருக்கும். அதனால் இவற்றில் காலத்துக்குக்காலம் கவசம் கழற்றப்பட்டு அதாவது போர்வை நீக்கப்பட்டு, புதுப் போர்வை உரம் பெறுமுன் வளர்ச்சி நிகழும்.


## அங்கிகள் பலவிதம் ஒவ்வொன்றும் ஒருவிதம்

சில இனங்கள் கழற்றிய கவசத்தை வீண்போக விடுவதில்லை; உணவாகக்கொள்ளும்.

இக்கணத்தில் பல வகுப்புக்களுண்டு. அதில் இன்செக்ராவும் (INSECTA) அறக்கினிடாவும் (ARACHNIDA) அடங்கும். வகுப்பு இன்செக்ரா (பூச்சிகள்) ஹெக்சப்போடா (HEXA PODA) - அதாவது "ஆறுகாலிகள்" எனவும் - அழைக்கப்படும். பூச்சிகளெல்லாம் இன்செக்ராவில் அடங்கும். சிலந்திகள், கொடுக்கன்கள், சிற்றுண்ணிகள் (MITES), உண்ணிகள் (TICKS), அறக்கினிட்டுக்கள் ஆகும். பூச்சிகள் மூன்றுசோடி அதாவது ஆறு கால்களை உடையவை. அறங்கினிட்டுக்கள் நாலு சோடி அதாவது எட்டுக் கால்களை உடையவை. ஐந்து சோடி அதாவது பத்து கால்களை (DECAPODA) உடைய ஆத்திரப்பொட்டுக்களுமுண்டு- உ+ம்: இறால், நண்டு போன்றவை. பல சோடி கால்களை உடையவையும் (CENTIPEDES, MILLIPEDES) உண்டு. மட்டைத்தேள் "நூறுகாலி" (CENTIPEDE) எனவும், அட்டை "மில்லியன் கால்" (MILLIPEDE) எனவும் அழைக்கப்படும்.

### வாய்பகுதிகள்

ஆத்திரப்பொட்டுக்களும் உயிர் வாழ்வதற்கு, சக்தியைப்பெறுவதற்கு உணவு கொள்ள வேண்டுமல்லவா? எதையும் அவை உணவாகக்கொள்ளும்; சில சதையை உணவாகக் கொள்ளும். அல்லது குருதியை உறிஞ்சி உணவாகக் கொள்ளும். பல தம்மினத்தையே உணவாகக்கொள்ளும். வேறுசில அமுதத்தையும் (தேன்) தாவரச் சாறுகளையும், தாவரங்களையும் உணவாகக் கொள்ளும். உணவு வகைக்கேற்ப வாய்ப்பகுதிகளும் அமைந்திருக்கும். கடிக்கும் வாய்ப்பகுதிகள், உறிஞ்சும் வாய்ப்பகுதிகள் புகுத்தி உறிஞ்சும் வாய்ப்பகுதிகள், நக்கும் வாய்ப்பகுதிகள் எனப் பூச்சிகளில் பலதரப்பட்ட வாய்ப்பகுதிகள் உண்டு. வண்டுகள், மயிர்க்கொட்டிகள், வெட்டுக் கிளிகள் போன்றவற்றில் இருப்பது கடிக்கும் வாய்ப் பகுதிகள். தேனீக்கள், வண்ணத்துப்பூச்சிகள், அந்துப்பூச்சிகள் போன்றவற்றில் இருப்பது உறிஞ்சும் வாய்ப்பகுதிகள். நுளம்பு, மூட்டைப் பூச்சி, மாட்டிலையான், தாவர மூட்டுப்பூச்சிகள் (உ+ம்: சர்க்கரைப்பாண்டியன் - PLANT BUGS), ஏபிட்டுக்கள் (அழுக்கணை - APHIDS) போன்றவற்றில் இருப்பது புகுத்தி உறிஞ்சும் வாய்ப்பகுதிகள். ஈக்களில் இருப்பது நக்கியுறிஞ்சும் வாய்ப்பகுதிகள்.




வகைக்குரிய சிலந்தியும் வகைக்குரிய பூச்சியும் - ஒப்பீடு

### சிறியவையானாலும் பயங்கரமானவை

இக்கட்டுரை கொலையாளிகள் தொடர்பானது. சிங்கம், புலி, சுறா போன்றவை மனிதனைத் தாக்குவதுடன் கொல்லவும் செய்யும் என்பது எமக்குத் தெரிந்ததே. பூச்சிகள், சிலந்திகளை அப்படிக்கொள்ள முடியாது. காரணம் இவை அளவில் மிகச்சிறியவை. இவை எமக்குத் தொல்லை தரலாம். ஆயினும் பயங்கரமானவை என்று கொள்ள முடியாது.

35 கோடி வருடங்களாகப் பூச்சிகளைப் போன்ற அங்கிகள் பூமியில் நிலைத்துள்ளன. வாழ்க்கைப் போரில் வெற்றிகாண்பதற்காக தற்காப்புக்கு உதவும் வகையில் பல இனங்கள் பலதரப்பட்ட "ஆயுதங்களை" விருத்தி செய்துள்ளன. இவை கடித்தோ, கொட்டியோ எமது குருதிவெள்ளத்தில் நஞ்சைப் புகுத்தலாம். அவற்றில் சில வேறுவழிகளிலும் ஆபத்தானவை. நோய்களைப் பரப்புவதன் மூலமோ, பயிர்களை அழிப்பதன் மூலமோ இவை பாதகமான விளைவுகளை ஏற்படுத்தலாம்.

### இளசுகள் ஆபத்தானவை


வண்ணத்துப்பூச்சிகளும், அந்துகளும் மகரந்தச் சேர்க்கையை ஏற்படுத்துவதன் மூலம் நன்மை செய்கின்றன. இவற்றைக் கவருவதற்கு என்றே தாவரங்கள் இவற்றிற்கு வசதியான நேரத்தில் மலருவதுடன் இவற்றிற்கு விருப்பமான மணத்தைத் தோற்றுவிப்பதுடன், அமுதத்தை உணவாகவும் கொடுக்கும். (இதுவும் ஒருவகையான லஞ்சம்தான்!). ஆயினும் இவற்றின் குடம்பிகளாகிய மயிர்கொட்டிகள்

உண்பதற்கென்றே வ
வளர வேண்டியிருப்ப
அளவில் உணவை உ
பதன் மூலமே இவை
தாவரங்களையும் வி
விடும். இதை அனுபவ
கண்டிருப்பீர்கள்.

### உணவுப் பெ... பழுதடையச்...

பல இன அந்துப்பூச்
டுகளின் குடம்பிகள்
வைத்த தானியங்கள்
பொருள்களை சேத
இறைச்சி, மீன், கருவா
டைகளையிடத் தோன்
றைக் கெடுத்துவிடும்
தானியங்களை அரித்த
கள் உணவுப் பொரு

- குகன் -





கடிப்பதற்கு உதவும் வாய்ப்பகுதிகள், வண்டின் உறுதியான சிபுகங்கள் (

கிருமிகளைப் பரப்பிவி
ரணமாகக் காணப்படும்
பொருள்களைக் கெடுப்
பரப்பும். சைவ உண
நடைகளுக்கு அவை
உட்செல்லும் அங்கிகள்
பவையாக அமைகின்ற
ர்களுக்கு அவர்கள்
அரிசி மற்றும் தானியங்
ளுக்குத் தெரியாமலே
கிடைக்கலாம்.)

### நஞ்சுள்ள மயி...

வண்ணத்துப் பூச்சிக
முட்டைகள், மயிர்கொ
கள் சுலபமாக அழிக்க
மானவை பறவைகள்,
அங்கிகளினால் உண
றன. இத்தகைய சிக்கல்
தம்மைப் பாதுகாப்பதற்
சைப் பயன்படுத்துகின்
காவின் கீழ் அந்து
MOTH CATERPILLAR
பீச்சுவதன் மூலம் த

# ...ப் பூச்சிகள் -1





ஒப்பீடு

ன்றே வாழுபவை. விரைவாக
யிருப்பதனால் இவை அதிக
ணவை உட்கொள்ளும். உண்
இவை பயிர்களையும் பிற
யும் விரைவாக நாசம் செய்து
அனுபவ வாயிலாக நீங்களும்
ள்.

## ...ப் பொருள்களை ...டையச் செய்பவை

ந்துப்பூச்சிகள், நீள்மூஞ்சி வண்
ம்பிகள் (புழுக்கள்) சேமித்து
ரியங்கள், மற்றும் உணவுப்
சேதமாக்கிவிடும். ஈக்கள்
கருவாடு போன்றவற்றில் முட்
தோன்றும் குடம்பிகள் அவற்
விடும். நீள்மூஞ்சி வண்டுகளும்
அரித்துக் கெடுத்துவிடும். ஈக்
பொருள்கள் மூலம் நோய்க்



...ங்கள் (தாடைகள்)

ரப்பிவிடும். குசினிகளில் சாதா
ரப்படும் கரப்பானும் உணவுப்
கெடுப்பதுடன் நோய்களையும்
உணவுக்காரர்களாகிய கால்
அவை உண்ணும் உணவுடன்
ங்கிகள் புரதச்சத்தை வழங்கு
கின்றன. (சைவ உணவுக்கா
ர்கள் உண்ணும் வண்டூதிய
னியங்கள் வாயிலாக அவர்க
மலே ஓரளவு புரதச்சத்துக்


## ... மயிர்கொட்டிகள்

பூச்சிகள், அந்துப் பூச்சிகளின்
ர்கொட்டிகள், கூட்டுப் புழுக்
அழிக்கப்படுகின்றன. அனேக
பகள், பிற பூச்சிகள் மற்றும்
உணவாகக் கொள்ளப்படுகின்
சிக்கல்களில் இருந்து தப்பித்
ப்பதற்கு சில இனங்கள் நஞ்
துகின்றன. ஐக்கிய அமெரிக்
அந்து மயிர்கொட்டி (PUSS
LLAR) போமிக்கமிலத்தைப்
ம் தம்மைப் பாதுகாத்துக்

கொள்ளும். வெனிசுலா (VENEZUELA) நாட்டின் சக்கரவர்த்தி அந்தின் (EMPEROR MOTH) மயிர்க்கொட்டி ஒரு மனிதனைக் கொல்லும் அளவிற்கு நஞ்சுள்ளது. நமது நாட்டில் ஆடு தின்னாப்பாலையில் சாதாரணமாகக் காணப்படும் சிவப்புநிற மயிர்க்கொட்டியும் உடலில் நஞ்சுள்ளது. கொட்டும் மயிர்க்கொட்டிகளின் (மயிருள்ளவை) மயிர் உடலில் சொறிவை ஏற்படுத்தும். கறி முருங்கை, பூவரசு, முள்முருக்கு போன்ற மரங்களில் காணப்படும் வெண்ணிற மயிருள்ள மயிர்க்கொட்டி கடுமையான நமைச்சலையும், சொறிவையும், வீக்கத்தையும் விளைவிக்கும். (நம்மில் சிலர் மயிர்க்கொட்டி விடத்திற்கு ஒவ்வாமை (ALLERGIC) இயல்புடையவர்கள். மயிர்க்கொட்டியைப் பொறுத்தவரை இவர்கள் மிகவும் அவதானமாக இருப்பர். மயிர்க்கொட்டி மயிரில் உள்ள விடமும், எறும்புகளில் உள்ள விடமும் ஒன்றே. அதாவது போமிக்கமிலம். காஞ்சோண்டியில் இருப்பதும் இதுவே.)


## பயங்கரமாகக் கொட்டுபவை

கொட்டும் பூச்சிகளில் தேனீக்களும், குளவிகளும், பெரிய குளவிகளுமே (கருங்குளவி -HORNET) மிகவும் கொடியவை. பாம்புகளைக் காட்டிலும் இவையே அதிகமான மனிதர்களைக் கொல்கின்றன. ஆண்டொன்றுக்கு கிட்டத்தட்ட 4000 பேர் இவற்றினால் கொட்டப்படுவதாகக் கருதப்படுகின்றது. இவை கொட்டுவதால் அதிக பாதிப்புக்குள்ளாகுபவர்கள் இளம் சிறார்களும், நோயாளிகளும், மிக வயது முதிர்ந்தவர்களுமே ஆவர். பலர் இவற்




தேனீயின் கொட்டும் உபகரணம்.

றின் நஞ்சுக்கு ஒவ்வாமை இயல்புடையவர்கள். இவர்கள் கொட்டுதலுக்கு ஆளானால் விளைவுகள் பாரதூரமாயிருக்கும். கழுத்தில் கொட்டப்பட்டால் வீக்கம் ஏற்படும் போது மூச்சுத்திணறல் ஏற்படலாம். சில சமயங்களில் ஒருமுழுத் தேனீக் கூட்டமும் ஒருவர் மேல் அமருவதுண்டு. ஒருவர் தேனீக்களால் 2200 தடைவைகள் கொட்டப்பட்டும் உயிர் வாழ்ந்தார் என்பதற்குப் பதிவுகள் உண்டு. ஒரே குளவியினால் மீண்டும் மீண்டும் கொட்ட முடியும். ஆயினும் முதற் கொட்டலின் போது தான் நஞ்சு அதிகளவில் பாய்ச்சப்படும். அதே குளவி அடுத்தடுத்துக் கொட்டினால் நஞ்சின் அளவுகுறைந்து பின் இல்லாமற் போய்விடும் நச்சுப்பை வெறுமையாக இருக்கும். தொடர்ந்து நஞ்சு சுரக்கப்பட்டு பை நிரம்பவேண்டும். இதற்கு சிறிது கால அவகாசம் வேண்டும்.




கொட்டும் மயிரற்ற மயிர்கொட்டி. இத்தகைய மயிர்கொட்டிகளைப் பெரும்பாலும் எலுமிச்சையினத் தவாரங்களில் காணலாம்.

தேனீக்கள் கொட்டும்போது கொடுக்கு கழன்று விடும். காரணம் கொடுக்கில் பின்நோக்கிய முட்கள் உண்டு. கொடுக்குக் கழரும் போது நச்சு உபகரணமும் முழுமையாகக் கழன்று விடும். அதாவது நச்சுப் பை, நச்சுச் சுரப்பிகள், நச்சுப்பையைச் சுருக்கும் தசைகள் ஆகியவை. அதனால் கொடுக்குக் கழன்றபின்னும் நஞ்சு புகுத்தப்பட்டுக்கொண்டேயிருக்கும். கொட்டிய தேனீயின் உடலுறுப்புக்களும் சில கழன்றுவிடும். அதனால் தேனீ இறந்து விடும். எனவே தேனீ மனிதனைக் கொட்ட முற்படுவது ஒரு தற்கொலைத் தாக்குதலே. பெண் தேனீக்களால்(தொழிலாளி)தான் கொட்டமுடியும். இராணியாலும் கொட்டமுடியும். ஆனால் அது தனக்குப் போட்டியாக வரக்கூடிய இராணியைக் கொட்டுமேயொழிய வேறு எதையும் கொட்ட முற்படுவதில்லை. ஆண் தேனீக்களால் கொட்டமுடியாது. ஒரு தேனீ கொட்டும் போது 22 தசைகளைப் பயன்படுத்தும்.

## குளவிகளும் தேனீக்களும் ஏன் கொட்டுகின்றன?

தற்பாதுகாப்புக்காகவே குளவிகளும் தேனீக்களும் மனிதனைக் கொட்டுகின்றன.




வண்டூதிய தானியங்களும், காரணகர்த்தாக்களாகிய குடம்பிகளும்.

அவற்றைச் சும்மா விட்டால் அவையும் நம்மைத் தீண்டா.

சில இனக் குளவிகள் தமது உணவை விறைக்கச் செய்வதற்காக அல்லது கொல்வதற்காகக் கொட்டும். மற்றும் சில குளவிகள் தம் குடம்பிகளுக்கு உடன் உணவு கிடைப்பதற்காக மயிர்க்கொட்டிகளைக் கொட்டி வைக்கும்.

## எச்சரிக்கையூட்டும் நிறங்கள்

அனேகமான தேனீக்களும் குளவிகளும் கறுப்பு, மஞ்சள் அல்லது சிவப்புப் பட்டைகளாகப் பிரகாசமான நிறங்களைக் கொண்டிருக்கும். இயற்கையில் இந்நிறங்கள் எச்சரிக்கையூட்டும் நிறங்களாகக் கொள்ளப்படும். நிறப்பார்வையுள்ள ஏனைய அங்கிகளுக்கு இயல்பூக்கத்தின் அடிப்படையில் இது தெரியும். ஆபத்தில்லாத சிலவும் இத்தகைய எச்சரிக்கையூட்டும் நிறங்களைக் கொண்டிருப்பதன் மூலம் தம்மைப் பாதுகாக்க முற்படுவதுண்டு. இது அநுகரணம்.(MIMICRY) எனப்படும்.

## மிகவும் பயங்கரமான தேனீ

கொட்டும் பூச்சிகளிலேயே மிகவும் ஆபத்தானதும், போர்தொடுக்கும் தன்மையுடையதுமான பூச்சி ஆபிரிக்க வான்வகைத் தேனீ (AFRICAN WILD BEE) ஆகும். சில ஆண்டுகளுக்கு முன் ஆபிரிக்கத் தேனீக்கள் சில தென்னமெரிக்காவிற்கு இறக்குமதி செய்யப்பட்டன. இவற்றில் சில தப்பிச் சென்று உள்ளூர் தேனீக்களுடன் இணங்கலந்து ஒரு புதுக் கலப்பினத்தைத் தோற்றுவித்தன. குறுகிய காலத்தில் இவை வடக்கு நோக்கிப் பரவி பல இறப்புக்களை ஏற்படுத்திவிட்டன. அறிவிக்கப்பட்ட மனித இறப்புக்கள் நூற்றியம்பது.

மனிதன் ஒரு நோக்குடன் ஆய்வுகளில் ஈடுபட இயற்கை பிறிதொரு திசையில் திசை திருப்பி விடுவதும் உண்டு! இயற்கையை வென்றுவிட்டதாகக் கருதும் மனிதனுக்கு இத்தகைய சில அடிகள் தேவைதான்! ★



கோவாப் பயிரில் மயிர்கொட்டிகள். எற்பட்ட அழிவு துலக்கமாகத் தெரிகின்றது.



பிடிப்பதற்கு உதவும் முன் சோடிக் கால்களும், கடிப்பதற்கு உதவும் வாய்ப்பகுதிகளும் - கும்பிடு பூச்சியில்.

## பாலியலும் வாழ்வியலும்

வாழ்வியல் தொடர
வலுவினை ஊட்டும்
பாலியல் வரவரப்
பாழாய் (ப்) போச்சு

தொல்லைகள் பெருகித்
தோஷம் தொற்றி
இல்லற வாழ்வு
இடிந்து போச்சு.

எங்கள் பண்புக் (கு)
ஏற்ற விதமாய் (த்)
தாங்கிய ஒழுக்கம்
தலைகீழ் ஆச்சு.

காம வேட்கை
கண்ட பாட்டில்
சேமம் கெடுக்கும்
சிதைவாய் ஆனது.

ஒருவனும் ஒருத்தியும்
உடன்பட் (டு) உளத்தால்
கருமம் ஆற்றிய
கட்டம் கலைந்தது.

'கண்டதே காட்சி'
கற்பு ஆண்பெண்
'கொண்டதே கோலம்'
குடும்பம் குமையுது.

அகவாழ் (வு) அதனில்
அடங்கி அவரவர்
தகவால் உணர்ந்த
தாகமும் மோகமும்.

புறவாழ் (வு) அதனில்
புகுந்து மிகுந்த
உறவால் நல்லறம்
உழுக்கு உதிருது.

செய்தி ஊடகம்
செவிப்புலன் கட்புலன்
எய்தித் தூண்டும்
எல்லாம் பாலியல்.

சொல்லிக் காட்டி (த்)
தூண்டித் துலக்க
அல்லற் பட்டு
அலையுது மானுடம்.

தன்னினச் சேர்க்கை;
தாங்கும் சிறுவரை
உன்னிக் கெடுக்கும்
உன்மத (ப்) போதை.

தாயை மகனைச்
சகோ தரங்களை
மாயை காட்டி
மடக்கிச் சுவைத்தல்.

இன்ன பழிகளால்
உலகில் எங்கும்
பன்னி நிற்கும்
பதற்றம் பலவாம்.

உயிரைக் கொல்லிகள்
உட்படப் பலநோய்
வயிர வாழ்வையே
வாட்டி வதைக்குது.

எய்தின் எய்திய
வாறாய் மனிதர்
கைதிகள் ஆகிக்
காமத் (து) அலைகிறார்.

குடும்பம் சமூகம்
குவலயம் இதனால்
இடும்பைக் (கு) உட்பட் (டு)
இளைக்குது வாழ்வியல்.

- நயினைக் கவிஞர்
நாக.சண்முகநாதபிள்ளை.

# 10ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 1928 - 07 - 24

உதிர்வு 1990 - 09 - 03

## அமரர் E.K.குமரையா

ஆண்டுகள் பத்து இன்று அகன்றாலும்
உங்கள் நினைவுகள் என்றென்றும்
எம்மை விட்டகலாது!

உங்கள் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்

மனைவி, மக்கள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

*99/6 சந்தனமாதாகோயில் ஒழுங்கை,*
*கச்சேரி கிழக்கு,*
*யாழ்ப்பாணம்.* (77910)

# கண்ணீர் அஞ்சலி



## லோறன்ஸ் அல்போன்ஸ்

அன்பே உருவான தம்பி அல்போன்ஸ்
அன்பாக எம்மோடு வாழ்ந்தாயே!
கனிவான நின் பேச்சால்
அனைவரையும் கவர்ந்தாயே!
எல்லாருக்கும் எல்லாமாய்
செல்லமாக வளர்ந்திட்டாய்!
கண்மூடி இமை திறக்குமுன்
காற்றாய்ப் பறந்தாய்!
நின் பிரிவைத் தாங்கவொண்ணாது
தவியாய்த் தவிக்கின்றோமையா!
நீ செய்த நன்மைகளை நாம் எண்ணி எண்ணிக்
கலங்குகின்றோம்.

எம் இதயம் இருக்குமட்டும் நாம் உன்னை
ஒருபோதும் மறவோம்.

உன் ஆன்மா நித்தியமாய் இறைவனில் சாந்தியடைய நாளாந்தம் பிரார்த்திக்கின்றோம்.

உன் பிரிவால் துயருறும்:
பாசமிகு திருக்குடும்ப மாகாணத் தலைவி,
சகோதரிகள், நண்பர்கள்.

(77951)

## அறிவித்தல்

### நிவாரணப் பொருள்கள் விநியோகம்

தென்மராட்சி கிழக்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் தொழிற் பரப்பில் இருந்து இடம்பெயர்ந்து கரவெட்டி பிரதேச செயலர் பிரிவில் வசிக்கும் மக்களுக்கு நெல்லியடியில் கொடிகாமம் வீதியில் அமைந்துள்ள எமது கிளையில் புரட்டாதி மாதம் தொடக்கம் நிவாரண விநியோகம் மேற்கொள்ளப்படும் என்பதை அறியத்தருகின்றேன்.

பொ. கனகராசா,
தலைவர்,
தென்மராட்சி கிழக்கு ப.நோ.கூ.ச.,
கொடிகாமம்.

(c/12795)

உ

உரும்பிராய்
கருணாகரப்பிள்ளையார் கோயில்

# வருடாந்த மஹோற்சவம்

04-09-2000 திங்கள் நண்பகல் 12 மணி கொடியேற்றம்.
12-09-2000 செவ்வாய் பிற்பகல் 2 மணி தேர்.
13-09-2000 புதன் பிற்பகல் 2 மணி தீர்த்தம்.

பலாலி ஆசிரியகலாசாலை உப அதிபர் சிவத்தமிழ் வித்தகர் சிவ.மகாலிங்கம் அவர்களது
சைவப்பிரசங்கம் தினசரி பிற்பகல் 3.45 மணியளவில் இடம்பெறும்.

எல்லாம் வல்ல கருணாகரப் பிள்ளையாரை வழிபாடு செய்து இஷ்டசித்திகளைப் பெற்றுய்யும் வண்ணம் அடியார்கள் அனைவரும் வேண்டப்படுகின்றனர்.

கருணாகரப் பிள்ளையார் கோயில்
உபயகாரர்கள்,
உரும்பிராய்.

(77924)

## அல்லாரையில் சிப்பாய் பலி

கொழும்பு,செப்.3

அல்லாரைப்பகுதியில் கடந்த வியாழனன்று இடம்பெற்ற மோதல் சம்பவம் ஒன்றில் சிப்பாய் ஒருவர் உயிரிழந்ததாக விசேட ஊடகத் தகவல் நிலையம் அறிவித்துள்ளது.

இந்த மோதலில் இரு விடுதலைப்புலிகள் உறுப்பினர்களும் -

கொழும்புத்துறையில் இடம் பெற்ற மற்றுமொரு மோதலில் ஏழு விடுதலைப்புலிகள் உறுப்பினர்களும் உயிரிழந்ததாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டது. (ஐ-3-8)

## உதவிகள் கிடைக்கவில்லை

தென்மராட்சி,செப்.3

தென்மராட்சிப் பிரதேசத்திலிருந்து இடம்பெயர்ந்து வடமராட்சிப் பகுதியில் சில கிராம அலுவலர் பிரிவுகளில் தங்கியுள்ள குடும்பங்களுக்கு பொது ஸ்தாபனங்களால் வழங்கப்படும் நிவாரண உதவிகள் எதுவும இதுவரைகிடைக்கவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது.

சில கிராம அலுவலர் பிரிவுகளில் சமையல் பாத்திரங்கள் வழங்கப்படவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டது. (ஐ-117)

## உப அலுவலகம் திறப்பு

தென்மராட்சி,செப்.3

தென்மராட்சி கிழக்குப்பகுதியில் இயங்கும் பாடசாலைகளின் நலன் கருதி வலயக்கல்வி அலுவலகத்தின் உப அலுவலகம் வரணி மகா வித்தியாலயத்தில உள்ள ஆசிரியர் நிலையத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

தென்மராட்சி கிழக்குப்பகுதியில் உள்ள பாடசாலைகளில் கடமையாற்றுவோர் இந்த உப அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளுமாறு வலயக்கல்விப்பணிப்பாளர் வ.செல்வராசா அறிவித்துள்ளார். (ஐ-117)

# ஜோதிகல்லே

தொலைபேசிச் சேவை மீண்டும் ஆரம்பமாகியுள்ளது.

★ தமிழ், ஆங்கில ரைப்பிங் செய்துகொள்ளலாம்.

எஸ். கணேசன்
சமாதான நீதிவான்
நெல்லியடி

(c/12782)



உ
கணபதி துணை
வல்லவை நெடியகாட்டுத்
திருச்சிற்றம்பலப் பிள்ளையார்
தேவஸ்தானம்

# பிராமணக்குருக்கள் தேவை

மேற்படி ஆலயத்திற்கு ஆற்றலும் அனுபவமுமுள்ள நித்திய நைமித்திய பூஜைகள் செய்வதற்கு பிராமணக் குருக்கள் ஒருவர் உடனடியாகத் தேவையாக உள்ளார். விரும்புவோர் கீழ்வரும் விலாசத்தில் தொடர்புகொள்ளவும்.

தலைவர்,
பரிபாலனசபை,
திருச்சிற்றம்பலப்பிள்ளையார் தேவஸ்தானம்,
நெடியகாடு,
வல்வெட்டித்துறை.

(c/12792)

# SALES CENTRE

உங்களுக்குத் தேவையான பொருள்களை நியாயமான விலைக்கு வாங்கவும் விற்கவும் தொடர்பு கொள்ளுங்கள்

# ஆனந்தி

கே. கே. எஸ் வீதி, துர்க்காபுரம்.

வாகனங்கள், வீட்டுப்பாவனைப் பொருள்கள், தளபாடங்கள், இயந்திர வகைகள், கூரை ஓடுகள், மரங்கள், வீடு, காணி முதலியன.

*தரமான சிற்பங்கள், ஓவியங்கள், அவை சார்ந்த புத்தகங்கள் என்பனவற்றை கொள்வனவு செய்கின்றோம்.*

## தேவை

ஆங்கிலத் தட்டெழுத்தாளர்
தொலைபேசி இயக்குநர் } பெண்கள்

தொலைபேசி இல: 212817

(77797)

# வாழ்த்துகின்றோம்



இன்று (03-09-2000) ஞாயிற்றுக்கிழமை இல்வாழ்வில் இணையும் சதீஸ் ~ சுதர்ஜினி தம்பதியினரை சீரும் சிறப்புடன் பல்லாண்டு வாழ வாழ்த்துகின்றோம்.

வாணிறெக்ஸ்
குடும்பத்தினர்.

*சாவகச்சேரி* (77939)

# ஆண்டு நிறைவில் அகவை ஒன்று




ஜேர்மனியில் வசிக்கும் சிறீ - சுமதி தம்பதிகளின் தவப்புதல்வன்

## செல்வன் ராகுல்

தனது முதலாவது பிறந்ததினத்தை இன்று ஞாயிற்றுக்கிழமை (03-09-2000) ஜேர்மனியிலுள்ள தன் இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகிறார்.

ராகுல் பல்கலைகளும் கற்று நல்லவனாகவும், வல்லவனாகவும் பல்லாண்டுகாலம் சீர்சிறப்புடன் வாழ அவரின் அன்பு அப்பா, அம்மா, யாழ்ப்பாணம் அப்பம்மா, அம்மம்மா, பஞ்சலிங்கம்மாமா, ருக்கு அத்தை, சிவராசா பெரியப்பா குடும்பம், இராசேஸ்வரன் பெரியப்பா குடும்பம், புத்தளம் ஜலீஸ் பெரியப்பா குடும்பம், மட்டக்களப்பு கௌஸ்தூபமணி பெரியப்பா குடும்பம், ஜேர்மனியில் வசிக்கும் புலேந்திரன் மாமா குடும்பம், இளங்கோ மாமா குடும்பம், புவன் மாமா குடும்பம், பிரான்சில் வசிக்கும் சிவலோகநாதன் பெரியப்பா குடும்பம், நோர்வேயில் வசிக்கும் ரவீந்திரன் அத்தான் குடும்பம், பிரான்சில் வசிக்கும் ஜெய்தீஸ் அண்ணா ஆகியோர் மனமார வாழ்த்துகின்றனர்.

*வளாக ஒழுங்கை,*
*திருநெல்வேலி.* (77885)

தகவல்:
இ.க.இராசேஸ்வரன்

# தணிக்கையை நீக்குமாறு ஜனாதிபதியிடம் கோரிக்கை

கொழும்பு, செப். 3

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலுக்கு முன் செய்திகள் மீதான தணிக்கையை நீக்குமாறு நியூயோர்க்கைத் தலைமையகமாகக் கொண்ட செய்தியாளர் பாதுகாப்புக் குழு (சி. பி. ஜே.) ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிடம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இது தொடர்பாக அந்த அமைப்பு விடுத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

நாடாளுமன்றத் தேர்தலுக்கு முன்னர் அதாவது ஓகஸ்ட் மாத 'நடுப்பகுதியில் செய்தித்தணிக்கை விதிகள் நீக்கப்பட்டுவிடும் என தபால் தொலைத் தொடர்புத்துறை அமைச்சர் மங்கள சமரவீர உறுதி அளித்திருந்தார்.

எனினும் செய்தித் தணிக்கை தற்போதும் தொடர்ந்த வண்ணமே உள்ளது. ஆபத்து ஏற்படுமோ? என்ற அச்சம் இல்லாமல் செய்திகளை வெளியிடும் நிலை பத்திரிகையாளருக்கு இருப்பது அவசியம் என்று உள்ளது.

இதேவேளை பாரிஸில் இருந்து இயங்கும் ''றிப்போட்டர்ஸ் சன்ஸ் புறொன்ரியர்ஸ்'' (ஆர். எஸ். எவ்) என்ற அமைப்பு பத்திரிகைத் தணிக்கைக்கு எதிராக உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்த மறுநாளே மீண்டும் அவசரகாலச் சட்ட விதிகளின் கீழ் தணிக்கையைப் பிரயோகித்தமைக்காக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்குத் தனது கவலையைத் தெரிவித்துக் கடிதம் ஒன்றை அனுப்பிவைத்துள்ளதாகக் கொழும்பிலிருந்து வெளிவரும் ஆங்கில நாளிதழ் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. (இ-7)

## விளையாட்டுப் போட்டி

யாழ்ப்பாணம், செப். 3

தொட்டிலடி சனசமூக நிலைய கண்ணன் முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டுப்போட்டி இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1.30 மணியளவில் நடைபெறும். (இ)

## சமய சந்நிதிகளில்

கொக்குவில், மஞ்சவனப்பதி முருகன் கோயில் வருடாந்த மஹோற்சவம் நாளை திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

தொடர்ந்து பத்து தினங்கள் நடைபெறும் இம்மஹோற்சவத்தின் ரதோற்சவம் எதிர்வரும் 12 ஆம் திகதி செவ்வாய்க்கிழமையும், தீர்த்தோற்சவம் மறுநாள் 13 ஆம் திகதி புதன்கிழமையும் இடம்பெறும். (ஐ-173)

★ ★ ★

நவாலி, செப். 3

நவாலி அருள்மிகு அந்திரான் முருகமூர்த்தி ஆலய வருடாந்த மஹோற்சவம் நாளை திங்கட்கிழமை காலை 9.30 மணிக்குக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது. (க-100)

★ ★ ★

நவாலி, செப். 3

ஆனைக்கோட்டை வரதவிக்ன விநாயகர் சம்மந்தப் பிள்ளையார் ஆலய வருடாந்த மஹோற்சவம் நாளை திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்குக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும். (க-100)

★ ★ ★

யாழ்ப்பாணம், செப். 3

யாழ். வண்ணை நீராவியடி ஸ்ரீ வாலாம்பிகா சமேத வைத்தியநாதன் ஆலய உற்சவம் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை ஆரம்பமாகியது. தொடர்ந்து 10 நாள்கள் உற்சவம் நடைபெறும்.

உற்சவ காலங்களில் தினமும் சமயச் சொற்பொழிவுகள் இடம் பெறவுள்ளன. (க-173)

★ ★ ★

கந்தர்மடம் ஆத்திசூடி வீதி அருள்மிகு ஸ்ரீ சித்திவிநாயகர் தேவஸ்தானத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு 1008 சங்காபிஷேகமும் மதியம் அன்னதானமும் நடைபெறும்.

மாலை 3 30 மணிக்கு பஞ்சமுக அர்ச்சனை நடைபெற்று விநாயகப் பெருமான் தெருவீதி உலாவரும் அலங்காரக் காட்சியும் நடைபெறும். (ஐ-73)

★ ★ ★

வடமராட்சி, செப். 3

அல்வாய் கிழக்கு தேவலவத்தைப் பிள்ளையார் ஆலய வருடாந்த மணவாளக் கோல விழா இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கு ஆரம்பம் ஆகும்.

மாலை விசேட நிகழ்ச்சிகளுடன் சிறப்பம்சமாக பட்டிமன்றம் இடம் பெறும். (க-103)

★ ★ ★

யாழ்ப்பாணம், செப். 3

பருத்தித்துறை, தும்பளை நெல்லண்டை அம்மன் ஆலய பாலஸ்தாபன கும்பாபிஷேகம் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை நடைபெறும். (க-15)

★ ★ ★

யாழ்ப்பாணம், செப். 3

இணுவில் விசாலாட்சி சமேத விஸ்வேஸ்வர சுவாமி திருக்கோயில் அம்மன் வாசல் உற்சவம் நாளை திங்கள் ஆரம்பமாகிறது. 12 ஆம் திகதி தேர்த்திருவிழாவும் 13 ஆம் திகதி தீர்த்தத்திருவிழாவும் 14 ஆம் திகதி திருக்கல்யாண உற்சவமும் 15 ஆம் திகதி வைரவ உற்சவமும் நடைபெறும். (இ)

## முன்பள்ளிகளுக்கு புத்தகங்கள் விநியோகம்

யாழ்ப்பாணம், செப். 3

முன்பள்ளிகளுக்கு 'யுனிசெவ்' நிறுவனத்தினால் வழங்கப்பட்ட புத்தகங்களின் விநியோகம் எதிர்வரும் 6 ஆம் திகதி காலை 10 மணிக்கு நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

வடமராட்சி தவிர்ந்த ஏனைய பகுதிகளைச் சேர்ந்த முன்பள்ளிகளுக்குப் பொறுப்பான ஆசிரியர்களை வருகை தந்து புத்தகங்களைப் பெற்றுக் கொள்ளுமாறு உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (ஐ-10)

## மத்தியஸ்தர் கருத்தரங்கு

யாழ். மாவட்ட உதைபந்தாட்ட மத்தியஸ்தர்களுக்கான கருத்தரங்கு ஒன்று எதிர்வரும் 10 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது. அனைத்து அங்கத்தவர்களையும், மத்தியஸ்தர் பரீட்சைக்கு தோற்றவிருப்பவர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு கோரப்பட்டுள்ளது. (இ)

# கொழும்பில் நேற்று மேலும் மூன்று கட்சிகள் வேட்புமனு

## பதுளை. குருநாகலில் தமிழரசுக் கட்சி

கொழும்பு, செப். 3

கொழும்பில் நேற்று மேலும் மூன்று அரசியல் கட்சிகள் வேட்பு மனுந்தாக்கல் செய்தனர்.

சிஹல உறுமய, ஸ்ரீ லங்கா முற்போக்கு முன்னணி, புதிய இடதுசாரி முன்னணி ஆகியவையே நேற்று கொழும்பு மாவட்டத் தேர்தல் தெரிவத்தாட்சி அதிகாரியிடம் தமது வேட்பு மனுக்களைக் கையளித்தனர்.

இதேவேளை — இலங்கை தமிழரசுக் கட்சியைச் சேர்ந்த ரி. கே. ஜி. ரஞ்சித் பதுளை மாவட்டத்திலும் குருநாகல் மாவட்டத்திலும் வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்துள்ளனர்.

திருகோணமலை மாவட்டத்தில் மக்கள் விடுதலை முன்னணி, மக்கள் சுதந்திர முன்னணி, பொது மக்கள் ஐக்கிய முன்னணி மற்றும் ஈ.பி.டி.பி. ஆகியவை வேட்பு மனுந் தாக்கல் செய்துள்ளன.

ஈ. பி. டி. பியினரால் திருகோணமலை மாவட்டத் தேர்தலுக்கான வேட்புமனு நேற்றுத் திருகோணமலை அரச செயலகத்தில் தாக்கல் செய்யப்பட்டது. (இ-8-5)

# இலங்கை மாணவர் தங்கியிருந்த விடுதி மீது உக்ரெய்னில் தாக்கு!

கிழக்கு உக்ரெய்னில் உள்ள லூகான்ஸ்க் நகரில் இலங்கையர் உட்பட ஆசிய நாட்டு மாணவர்கள் தங்கியிருந்த விடுதி ஒன்று கடந்த மாதம் 20 ஆம் திகதி இனந்தெரியாதோரின் தாக்குதலுக்கு உள்ளாகிப் பலத்த சேதமடைந்ததாகத் தற்போது செய்திகள் வெளியாகியுள்ளன.

சம்பவதினம் இரவு மேற்படி விடுதிப்பகுதிக்குள் திடீரென நுழைந்த சுமார் 30 பேர் அடங்கிய குழு ஒன்று இரும்புக் கம்பிகள் மற்றும் பொல்லுகளைக் கொண்டு விடுதியின் யன்னல்களையும் விடுதிக்கு உள்ளிருந்த தளபாடங்களையும் அடித்து நொறுக்கியதாகத் தெரிவிக்கப்பட்டது.

தாக்குதலை நடத்தியவர்கள் '' உங்களைக் கொல்லப் போகின்றோம்'' என்று கூச்சலிட்டதாகத் தாக்குதலின் போது விடுதிக்குள் இருந்த இலங்கை மாணவர் ஒருவர் பின்னர் தகவல் வெளியிட்டதாக கொழும்புப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

கடந்த பல மாதங்களாக உக்ரெய்னில் இலங்கையர் மீதான தாக்குதல்கள் அதிகரித்துள்ளன என்றும் அந்தப் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது. (இ-7)

# சைக்கிளைத் தோளில் சுமந்து சென்ற மாணவர்

தென்மராட்சி, செப் 3

ரியூசன் முடிந்து வீதியில் சைக்கிளில் சமாந்தரமாக வந்த மாணவர்கள் சைக்கிள்களை தோளில் சுமந்துசென்ற சம்பவம் நேற்று முன்தினம் நெல்லியடிச் சந்தியில் இடம் பெற்றது.

வீதிப்போக்குவரத்துக் கண்காணிப்புக்கடமையில் ஈடுபட்டிருந்த படையினரே சைக்கிளில் சமாந்தரமாக வந்த மாணவர்களுக்கு இந்தத் தண்டனையை வழங்கினர் என்று தெரிவிக்கப்பட்டது.

அண்மைக்காலமாக நெல்லியடி சந்தியில் போக்குவரத்து நெருக்கடி ஏற்பட்டுள்ளதால் போக்குவரத்து கண்காணிப்பு நடவடிக்கைகளைப் படையினர் கவனித்து வருகின்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது. (இ-117)

## மரத்தில் ஏறிய இளைஞன் தவறி விழுந்து மரணம்

யாழ்ப்பாணம், செப். 3

மரத்தில் ஏறிய இளைஞன் தவறிவிழுந்து அந்த இடத்திலேயே உயிரிழந்தார்.

யாழ்ப்பாணம், மடத்தடிப் பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் லோறன்ஸ் அல்பேரன்ஸ் (வயது 22) என்ற இளைஞனே மரணமானவராவார்.

யாழ். ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்ட இவரின் சடலம் நேற்று நடைபெற்ற பிரேத பரிசோதனை மரண விசாரணையின் பின் கன்னியர்மடம் புனித சகோதரிகளிடம் கையளிக்கப்பட்டது.

இவரின் பெற்றோர், உறவினர் இடம்பெயர்ந்து வன்னிப் பகுதியில் உள்ளனர் எனத்தெரிவிக்கப்பட்டது. (இ-15-139)

## சமூகமளிக்கக் கோரிக்கை

யாழ்ப்பாணம், செப். 3

இறுதி வருட மாணவர்கள் அனைவரையும் நாளை திங்கட்கிழமை காலை 10.00 மணியளவில் இராமநாதன் நுண்கலைக் கழகத்தில் தவறாது சமூகம் தருமாறு கோரப்பட்டுள்ளது. (இ)

# வீடுகளுக்கு சென்று பொதுமக்கள் உடைமையை எடுத்துவர ஒழுங்கு

யாழ்ப்பாணம், செப் 3

இருபாலை கிழக்கு (J/258) கிராம சேவை உத்தியோகத்தர் பிரிவிலிருந்து இடம் பெயர்ந்த மக்கள் தமது வீடுகளுக்குச்சென்று தமது உடைமைகளை எடுத்து வருவதற்கு ஒழுங்குகள் செய்யப்படவுள்ளது.

இதற்கான ஒழுங்குகளை ஈ. பி. டி. பி. மேற்கொண்டு வருவதால் மேற்படி பகுதியிலிருந்து இடம்பெயர்ந்த மக்களை நாளை திங்கட்கிழமை காலை 10 மணிக்கு இருபாலை டச்சு வீதியிலுள்ள மது கல்வி நிலையத்தில் தமது விவரங்களைப்பதிவு செய்து கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர். (இ-5)

# யாழ். ஆஸ்பத்திரியில் சிற்றூழியர்கள் 72 பேருக்கு நிரந்தர நியமனம் கிடைத்தது

யாழ்ப்பாணம், செப். 3

யாழ். போதனா வைத்தியசாலையில் சமயாசமய சிற்றூழியர்களில் 72 பேருக்கு நிரந்தர நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

நிரந்தர நியமனத்துக்காக சுமார் 100 பேர் நேர்முகப் பரீட்சைக்கு சமுகமளித்த போதிலும் 28 பேருக்கு நிரந்தர நியமனம் வழங்கப்படவில்லை.

இவர்கள் 6 மாதகாலத்தை பூர்த்தி செய்த போதிலும், சேவைமூப்பு அடிப்படையில் 1996, 97, 98 ஆம் ஆண்டுகளில் தற்காலிக நியமனம் பெற்றவர்களே தற்போது நிரந்தரமாக்கப்பட்டுள்ளனர்.

இதற்கமைய 01—11—99 திகதி இடப்பட்ட இவர்களுக்கான நிரந்தர நியமனக் கடிதங்கள் நேற்று கையளிக்கப்பட்டன. (ஐ-15)

# பிரேமதாசவின் கொள்கையை முன்னணி அமுல் செய்யும்

மறைந்த ஜனாதிபதி பிரேமதாசவின் கொள்கைகளையும் எண்ணங்களையும் பிரஜைகள் முன்னணி நிறைவேற்றும்.

இவ்வாறு அதன் தேசிய அமைப்பாளர் சிறிசேன கூரே தெரிவித்தார்.

மறைந்த ஜனாதிபதி பிரேமதாசவுக்கு ஒரு தூரநோக்கு இருந்தது. அவரைப் போன்று வறியவர்களுக்கு உழைத்தவர்கள் வேறு எவரும் இல்லை. அவர் விட்ட இடத்திலிருந்து தொடர்வதே எமது நோக்கம். நாம் 22 மாவட்டங்களில் போட்டியிடுவோம். இன்றைய அரசியல் கலாசாரத்தை மாற்றும் வகையில் நாம் செயற்படுவோம்.

பத்தாவது நாடாளுமன்றம் கலைக்கப்படுவதற்கு முன்பு மக்களின் பிரதிநிதிகள் நாடாளுமன்றத்தின் உள்ளேயும் வெளியேயும் எவ்வாறு வெட்கக்கேடான முறையில் நடந்து கொண்டார்கள் என்பதை மக்கள் கண்டனர் — என்றார். (இ)

## ரட்னசிறி ராஜபக்ஷ சுயேச்சையாக செயற்பட முடிவு

கொழும்பு மாநகரசபை முன்னாள் மேயரும், ஐ.தே.க வின் மேல் மாகாண சபை உறுப்பினருமான ரட்னசிறி ராஜபக்ஷ ஐ.தே. கவிலிருந்து ஒதுங்கி சுயேச்சையாக செயற்பட முடிவு செய்துள்ளார்.

எதிர்வரும் பொதுத் தேர்தலில் ஐ. தே. க. சார்பில் வேட்பு மனுத்தாக்கல் செய்ய முடியாது போனதினால் தான் பெரிதும் ஏமாற்றம் அடைந்துள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

இதனாலே ஐ. தே. கவில் இருந்து ஒதுங்க முடிவு செய்துள்ளதாக அவர் கூறினார். (இ-5)

# இராணுவத்தில் மீண்டும் இணைந்த 3,000 பேர் யுத்தமுனைக்கு

கொழும்பு, செப். 3

இராணுவத்திலிருந்து தப்பிச் சென்று மீண்டும் இராணுவத்தில் இணைந்து கொண்ட 3 ஆயிரம் படையினர் யுத்தமுனைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

வடக்கு - கிழக்கு பகுதிகளிலுள்ள படை முகாம்களுக்கு இவர்கள் அண்மையில் அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. (இ-5)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## தவறிவிட்டது

வரணி வடக்கைச் சேர்ந்த கந்தசாமி குணரத்தினம் என்பவருடைய தே.அ.அ.(இல. 572350797v), வி.அ. அட்டை என்பன தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் பருத்தித்துறை மினிபஸ் சங்கத்தில் ஒப்படைக்கவும். (77956)

முத்துத்தம்பி கேதீசன் என்பவருடைய தே.அ.அட்டையும் விசேட அ.அட்டையும் K.K.S. றோட்டுக்கும் கேசாவில் பிள்ளையார் கோயிலுக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் 26, நாவலடி லேன், வண்ணார்பண்ணை என்னும் முகவரியில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். **T.P: 2845** (77970)

பாடசாலை வீதி, கெருடாவில் சாவகச்சேரியைச் சேர்ந்த சின்னப்பு அனுரா என்பவரது விசேட அ.அ., தேசிய அ.அ.(இல. 615350974v) என்பன நல்லூர் தேர் உற்சவத்தின் போது ஆலயச் சூழலில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து S.குணநாயகம், 309/50, சிவன்குருவீதி, நல்லூர் எனும் முகவரியில் ஒப்படைத்து உதவவும் (77953)

திருமதி சண்முகதாசன், இல. 5/1. பிள்ளையார் ஒழுங்கை, திருநெல்வேலி எனும் முகவரியில் வசிக்கும் ஜெயந்தி சண்முகதாசன் என்பவரது வி.அ.அட்டை, தே.அ. அட்டை (இல. 756160540v). பல்கலைக்கழக அ.அட்டை என்பன நல்லூர் கந்தசுவாமி கோயிலில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் மேற்காணும் முகவரியில் ஒப்படைத்து உதவவும். அல்லது 3409 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். (77943)

## உடன் விற்பனைக்கு

ஒருமாதம் நிரம்பிய 150 சேவல் குஞ்சுகள் விற்பனைக்கு உண்டு. நா. ஸ்ரீகாந்தன், 103, ஓட்டுமடம் வீதி, யாழ்ப்பாணம். (77965)

## விற்பனைக்கு

71ஸ்ரீ 7289 என்ற இலக்கமுடைய நல்ல நிலையில் ஓடிக்கொண்டிருக்கும் **KUBOTA 375CC** லான்ட் மாஸ்ரர் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு:பெருமாள் ராஜ்குமார், c/o கணேசலிங்கம் எபிறோன் மிக்ஷர் கடை, 94, தச்சேரி நல்லூர் றோட், யாழ்ப்பாணம். (77957)

கொழும்பில் இருந்து தருவிக்கப்பட்ட 12ஸ்ரீ **LANCER** கார் விற்பனைக்கு உண்டு. புத்தகம், பெற்றோல் காட் என்பன உண்டு. தொடர்பு: 11 ,கஸ்தூரியார் ஒழுங்கை, யாழ்ப்பாணம். (77949)

நல்லநிலையில் உள்ள மேசைகள், கதிரைகள், கட்டில்கள் மற்றும் வீட்டிற்கு உபயோகமான தளபாடங்கள், இரும்பு அலுமாரி, ஷோகேஸ், எவர்சில்வர் பாத்திரங்கள் உடன் மலிவு விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 87, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். (நீராவியடி பிள்ளையார் கோயிலுக்கு அண்மையில்) (77968)

## மணமகன் தேவை

யாழ். இந்து கௌரவ உயர் குடும்பத்தைச் சேர்ந்த சைவபோசன 1969 ஆம் ஆண்டு செவ்வாய்க் குற்றம் நிரம்பிய (கிரக பாவம் 55 கொண்ட) அழகிய உயர் குணம் மிக்க பட்டதாரி ஆசிரியைக்கு நற்பண்புகள் நிறைந்த தகுதியுடைய மணமகனைப் பெற்றோர் எதிர்பார்க்கின்றனர். அனைத்து விவரங்களும் உள்ளடங்கலாக உடன் தொடர்புகளுக்கு: விளம்பர இலக்கம் 1089, மே/பா உதயன், யாழ்ப்பாணம். (77913)

## O/L MATHS

கணிதத்தில் ஆரம்ப அறிவு இல்லாதவர்களுக்கும் இதுவரை சித்தியடையாதவர்களுக்கும் 35 வருட அனுபவமுடைய ஆசிரியரினால் 40 மணித்தியாலங்களில் **Distinction** பெறுபேறடையக் கற்பிக்கப்படும். தொடர்பு: க.ஆறுமுகநாதன், c/o T.செல்வராசா, ஆனைக்கோட்டை, 4ஆம் கட்டையில் அமைந்துள்ள ஹரிஸ் களஞ்சியத்தில் சந்திக்கவும். (77920)

## இறைச்சிக்கோழி

இறைச்சிக்குகந்த சேவல் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: இல. 15, 6ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம். (சின்னக்கடைக்கு அருகில்). (77964)

இறைச்சிக்கோழி (கல்பேட்ஸ், சேவல் என்பன) விற்பனைக்குண்டு. தினமும் சுத்தம் செய்து கொடுக்கப்படும். தொடர்பு: 40, கோயில் வீதி, யாழ்ப்பாணம். (77922)

சேவல், கல்பேட்ஸ் மொத்தமாகவும் சில்லறையாகவும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 31, மான்ஸ் பாடசாலை வீதி, உடுவில் சுன்னாகம். (கண்ணா வீடியோ சென்ரர் வளவு) (77644)

## நிவாரணம்

நீரிழிவு, ஆஸ்த்மா, கபம், ஒற்றைத் தலைவலி, பீனிசம், ஊளைச் சதை, இந்திரிய வியாதிகள் இன்னும் பலவற்றுக்கும் மற்றும் திருமணத் தடை, வியாபார விருத்தித் தடை, கிரக பாவங்களுக்கும் நிவாரணம் பெற ஸ்ரீராகவேந்திர ஜோதிடம், 159A, கோயில் வீதி, நல்லூர். (77842)

## கடை வாடகைக்கு உண்டு

K.K.S றோட், சுன்னாகம் MPCSக்கு அருகில் 82எனும் இலக்கமுடைய கடை ஒன்று வாடகைக்கு உண்டு. தொடர்பு: K.சொக்கலிங்கம், பங்களாலேன், மல்லாகம். (77963)

## மாணவருக்கு அழைப்பு

யாழ்ப்பாணம்,செப்.3

தென்மராட்சிப்பகுதியில் இருந்து இடம்பெயர்ந்து தற்பொழுது வடமராட்சியில் கல்வி கற்கும் மந்துவில் ஸ்ரீபாரதி வித்தியாலய ஆசிரியர்களையும், மாணவர்களையும் நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்துக்கு அருகில் உள்ள பிகொன் கல்வி நிலையத்தில் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு தன்னைச்சந்திக்குமாறு அதிபர் கேட்டுள்ளார்.(ஐ-10)

## திருமறைக் கலாமன்ற ஒன்று கூடல்

திருமறைக் கலாமன்றத்தின் கலைஞர்களுக்கான செப்ரெம்பர் மாத ஒன்று கூடல் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 10.30 மணிக்கு கலைத்தூது மணிமண்டபத்தில் நடை பெறும்.அத்துடன் நாடகப்பயிலக மாணவர்களுக்கான வகுப்புக்கள் இன்று பிற்பகல் 4.00 மணிக்கு மீண்டும் ஆரம்பமாக உள்ளதாகவும் திருமறைக் கலாமன்றத்தின் பொதுச் செயலாளர் தெரிவித்துள்ளார்.(ஐ-ரி)

## தபால் பொதிகள் வந்தன

யாழ்ப்பாணம்,செப்.3

நேற்று முன்தினம் பருத்தித்துறைக்கு வந்த செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் கப்பலில் குடாநாட்டுக்கான வெளியூர்த் தபால்கள் அடங்கிய 110 தபாற் பொதிகள் எடுத்துவரப்பட்டன.

இதே கப்பலில் குடாநாட்டில் சேகரிக்கப்பட்ட வெளியூர்த் தபால்கள் அடங்கிய 72 தபாற் பொதிகள் அனுப்பி வைக்கப்பட்டதாகத் தபால் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

அத்துடன் யாழ்.பிரதம தபாலகத்துக்கு சாதாரண முத்திரைகளும் எடுத்து வரப்பட்டதாக அவர் தெரிவித்தார். (ஐ-10)

## வீடியோ நாடா ஏற்பது நிறுத்தம்

யாழ். பிரதம தபாலகத்தில் வீடியோ நாடாக்களை ஏற்றுக் கொள்ளும் நடவடிக்கைகள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளதாக யாழ்.பிரதம தபாலதிபர் தெரிவித்துள்ளார். (க-10)

# 41ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும்

தோற்றம் 1910 - 08 - 16



மறைவு 2000 - 07 - 26

## திருமதி சண்முகம் அழகம்மா

(மலாயன் பென்சனியர்)

அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகள்இன்று (03.09.2000) ஞாயிற்றுக்கிழமை வில்லூன்றி புனித தீர்த்தக்கரையிலும், நாளை (04.09.2000) திங்கட்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்திய நிகழ்விலும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*காளிகோயிலடி,*
*கோப்பாய் மத்தி,*
*கோப்பாய்.*

உங்கள் பிரிவினால் துயருறும்
**பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

(77981)

# உடன் விற்பனைக்கு

***CANON NP 1215 PHOTOCOPY MACHINE*** (கனொன் ***NP 1215*** போட்டோ பிரதி இயந்திரங்கள்) ***LAMINATING MACHINE*** (அடையாள அட்டை கவரிடும் இயந்திரம்) ***YAMAHA GENERATOR*** (யமகா ஜெனரேற்றர்) மற்றும் போட்டோ பிரதி இயந்திரத்திற்குரிய உதிரிப்பாகங்கள், ரோணர், றம், அடையாள அட்டை கவரிடுவதற்குரிய கவர்கள் மற்றும் பெரிய சிறிய கவர்கள் என்பன உடன் மலிவு விற்பனைக்குண்டு.

*தொடர்பு:-*

**87, பிறவுண் வீதி,**
**யாழ்ப்பாணம்.**
(நீராவியடிப் பிள்ளையார் கோயிலுக்கு அருகில்)

(77967)

# கண்ணீர் அஞ்சலி

வர்த்தகநெறி இரண்டாம் வருடத்தைச் சேர்ந்த

**திரு.செ.தயாபரன்** அவர்களின் தந்தையார்

## அமரர் வ.செல்லையா

அவர்களின் மறைவினால் துயருறும் குடும்பத்தின் துயரில் பங்கு கொள்வதோடு அன்னாரின் ஆத்ம சாந்தி வேண்டி இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

மாணவர் மன்றம்,
பலாலி ஆசிரிய கலாசாலை.

(77958)

# கண்ணீர் அஞ்சலி

எமது சக மாணவன் வரணியூர்

**ரங்கநாதன் (ரங்கன்)**

அவர்களின் அன்புத் தந்தையார்

## அமரர் கதிர்காமநாதன்

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தி பெற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**B.A. Part I** மாணவர்கள்,
புதிய உயர் கல்லூரி,
ஆரியகுளம் சந்தி.

(77976)

# இருபத்து நான்காவது ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 14 - 05 - 1914



இறப்பு 30 - 08 - 1976

## அமரர் ஆர்.செல்லையா

(சன்லைற் றைக்கிளீனேர்ஸ் ஸ்தாபகர்)

தாங்குதல் தானேயன்றித் தாங்குதல் யார்க்கும்
வேண்டாமென
தாங்கியே வாழ்ந்தீர் தலைமுறைகள் யாவையும்
தர்மசீலரே!
தாங்கும் வேர்களாய் நாமிருந்தும் தனிமரமாய்
தாங்கி நின்றெம்மை
தாங்கித் தலைநிமிர வைத்தவரே நின் ஆன்மா
சாந்தியடைக எனப் பிரார்த்திக்கும்

*30/2, மருதடி வீதி,*
*நல்லூர்,*
*யாழ்ப்பாணம்.*

அன்பு மனைவி,
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(77972)


# கொழும்பு வரும் பயணிகளுக்கு ஒரு நற்செய்தி!

# ஹோட்டல் சீவம்ஸ்

தலைநகரில் கடந்த 15 ஆண்டுகளாக உங்களுக்குச் சிறந்த சேவை செய்துவரும் ஒரே ஸ்தாபனம்

**ஹோட்டல் சீவம்ஸ்** இன்றே விஜயம் செய்யுங்கள்.

கொழும்பில் தங்குவதற்கு ஏற்ற மிகச் சிறந்த சுற்றாடலுடன் நல்ல காற்றோட்டம் உள்ள தனி அறைகளும் இரண்டு பேர் தங்குவதற்கு ஏற்ற அறைகளும் சிற்றுண்டிச்சாலையுடன் அமைந்த ஒரே இடம். இன்றே விஜயம் செய்யுங்கள்!

# HOTEL SEIVAMS (GUEST HOUSE)

No. 29A, SANGAMITHA MAWATHA.
KOTAHENA, COLOMBO - 13.
T.P. NO. 356522

(77966)

# உள்நாட்டில் கட்டப்பட்ட கடற்படை ரோந்துப் படகு

கொழும்பு,செப்.3

70 லட்சம் ரூபா செலவில் கடற்படைக்கெனக் கட்டப்பட்ட கரையோர ரோந்துப்படகின் வெள்ளோட்ட விழா வெலிசறையில் உள்ள கடற்படைத் தலைமையகத்தில் நடைபெற்றது.

பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்த இவ் விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார்

"எமது நாடு ஒரு தீவு. எமது தீவைப் பாதுகாப்பதற்கான எல்லா நடவடிக்கைகளையும் கடற்படையினர் மேற்கொள்வர்" என்று அங்கு உரையாற்றிய பிரதி அமைச்சர் ரத்வத்த கூறினார்.

கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் சிசில் திரேசாவும் அங்கு உரையாற்றினார்.

எழுபது லட்சம் ரூபா செலவில் கட்டி முடிக்கப்பட்டுள்ள இந்த ரோந்துப் படகை இறக்குமதி செய்வதாயின் ஒன்றின் விலை ஒரு கோடி எழுபது இலட்சம் ரூபா வரை இருக்கும் என்று கடற்படைத் தளபதி தெரிவித்தார். (ஐ-6-20)

# போரை நிறுத்தி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முதலில் தோற்றுவிக்க வேண்டும். அதன் பின்னரே பேச்சுக்கள் ஆரம்பிக்கப்பட வேண்டும்.

தமிழ் மக்களின் அபிலாசைகளை உள்ளடக்கிய திம்புக் கோட்பாடுகளின் அடிப்படையில் தீர்வு ஒன்று காணப்பட வேண்டும்.

மொழிவாரி மாநில சுயாட்சி வழங்கப்பட்டு, மாநில அரசுக்கு கூடுதல் அதிகாரங்கள் பகிரப்பட வேண்டும்.

தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான பேரம்பேசும் பலம் விடுதலைப் புலிகளிடம் தான் இருக்கிறது.

விடுதலைப் புலிகளிடம் இருக்கின்ற இராணுவப் பலத்திற்குச் சமனாக தமிழ் அரசியல் கட்சிகளின் அரசியல் பலம் போதாத நிலையில் உள்ளது. சகல தமிழ்க் கட்சிகளையும் ஒன்றிணைத்து தமிழ் அரசியல் பலத்தை உருவாக்க வேண்டிய பொறுப்பு தமிழர் விடுதலைக் கூட்டணியிடமே இருக்கிறது.

தொடரும் யுத்தத்தை நிறுத்தும் சக்தி எந்தவொரு தமிழ்க் கட்சிக்கும் இல்லை. சர்வதேச ரீதியிலான அழுத்தங்கள் மூலமே யுத்தத்தை நிறுத்த முடியும்.

அரசின் தற்போதைய தீர்வுத் திட்டத்தில் தமிழர்களின் அபிலாசைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய எதுவுமில்லை.

1995 ஆம் ஆண்டு அரசுத் தரப்பால் முன்வைக்கப்பட்ட தீர்வுத் திட்டம் ஓரளவுக்கு ஏற்றுக் கொள்ளத் தக்கதாக இருந்தது. இது 1996 ஆம் ஆண்டு வெட்டிக் குறைக்கப்பட்டது. பின் 1997, 1999ஆம் ஆண்டுகளில் அதுவும் குறைக்கப்பட்டு அரை குறைத்தீர்வுத் திட்டமாக முன்வைக்கப்பட்டது.

இந்தத் தீர்வுத் திட்டத்தில் சில முன்னேற்றங்கள் இருப்பதாகவும், இதனை வைத்துக்கொண்டு மேலும் திருத்தங்கள் செய்யலாம் என்றும் தெரிவித்து ஒவ்வொரு கட்சிகளும் வெவ்வேறு கருத்துக்களைக் கூறி வருகின்றன.

1994 ஆம் ஆண்டு நாம் சந்திரிகாவை ஆதரித்தோம். சமாதானத்தை ஏற்படுத்தி தமிழ் மக்கள் ஏற்கக் கூடிய கௌரவமான தீர்வை ஏற்படுத்துவேன் என்று அப்போது சந்திரிகா தெரிவித்திருந்தார்.

1995ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் இராணுவக் கட்டுப்பாட்டுக்குள் வந்ததன் பின்னர் அவரின் போக்கில் மாற்றம் ஏற்பட்டது. இராணுவத் தீர்வே அவரது செயற்பாட்டில் மேலோங்கிக் காணப்பட்டது.

இதனால் அரசின் போக்குக் குறித்து நாம் விமர்சிக்கத் தொடங்கினோம். எனவேதான் எங்கள் மத்தியில் குழப்பத்தை ஏற்படுத்த இந்தியாவில் இருந்து வரதராஜப் பெருமாளை இலங்கைக்கு அழைப்பித்தார் சந்திரிகா.

எமது கட்சிக்கோ, கட்சியின் செயலாளர்நாயகத்துக்கோ தெரியாமல் தான் வரதர் கொழும்புக்கு கூட்டிவரப்பட்டார்.

கொழும்பு விமான நிலையத்தில் அவர் வந்து இறங்கியதும் புலனாய்வுப் பிரிவினரால் பொறுப்பேற்கப்பட்டு புலனாய்வுப் பிரிவுத் தலைமை அலுவலகத்திலே தங்க வைக்கப்பட்டார்.

கட்சியை மீண்டும் இராணுவமயப்படுத்த வேண்டும் என்பதற்காக வரதர் பல முயற்சிகளை மேற்கொண்டார். அதற்கான ஆதரவு கிடைக்கவில்லை. இதுவே கட்சிக்குள் பிளவு ஏற்படக் காரணமாக அமைந்தது.

மீன்பிடி அமைச்சின் ஆலோசகர் பதவி 1995ஆம் ஆண்டு அமைச்சர் இந்திக குணவர்த்தனவினால் எமது கட்சிக்கு வழங்கப்பட்டது உண்மை. ஆனால் தற்பொழுது இப்பதவி செயலிழந்துவிட்டது.

1990ஆம் ஆண்டிலிருந்து 10 வருட காலமாக கட்சியை சுரேஷ் அணியினரான நாங்கள் தான் வளர்த்தோம்.

இந்தியாவில் புழல், மண்டபம், திருச்சி போன்ற இடங்களிலுள்ள முகாம்களில் தங்கியுள்ள எமது தோழர்களுக்கு தேவையான உதவிகளை வழங்கி வந்ததுடன் வவுனியா, மட்டக்களப்பு, கொழும்பு போன்ற இடங்களில் அலுவலகங்களைத் திறந்தும் கட்சி நடவடிக்கைகளை மேற்கொண்டு வந்தோம்.

கட்சி நிதியை எல்லோரும் தான் பயன்படுத்தினோம். தனிய ஒருவர் மட்டும் நிதியை செலவு செய்தார் என்பதனை ஏற்றுக்கொள்ள முடியாது.

அரசுக்கு ஆதரவாகச் செயற்படும் கட்சிகளில் தமிழர் விடுதலைக் கூட்டணி முதன்மையான கட்சி. கொழும்பில் கூட்டணியின் செயலாளர் நாயகம் சம்பந்தனுக்கு அரசு பாதுகாப்பு வழங்கி வருகின்றது.

கொழும்பில் அரசுடன் உறவு வைத்துள்ள கூட்டணி யாழ்ப்பாணத்தில் அதனை மறைக்கப்பார்க்கிறது.

- இப்படி அவர் மேலும் கூறினார். (உ-5)

# நிறைவான சுயாட்சி மூலமே சமாதானம் ஏற்பட முடியும்

## தமிழ்க் காங்கிரஸ் அறிக்கை

தமிழ் ஈழவர் தமக்கென நிறைவான சுயாட்சியினைத் தமது தாயகத்தில் நிறுவுவதன் மூலமே நீடித்த சமாதானத்தினை நிலவச் செய்ய முடியும்.

இவ்வாறு அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ்கட்சி விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் சில பகுதிகள் வருமாறு:-

தமிழ்த் தேசிய இனத்தின் மூத்த தமிழ்க்கட்சி தமிழ்க் காங்கிரஸ் என்ற முறையிலும், ஜனநாயக அரசியல் கட்சி என்ற முறையிலும் நாங்கள் இந்தத் தேர்தலில் போட்டியிட முன் வந்துள்ளோம்.

தமிழ்த் தேசிய இனத்தின் சுதந்திர வாழ்வுக்காகவும், சுயமரியாதையுடன் கூடியவாழ்வுக்காகவும், பொருளாதார சுபீட்சம் நிறைந்த வாழ்வுக்காகவும் அயராது பாடுபடுவோம்; இதுவே நமது இலட்சியம்.

தமிழ் இளைஞர் பட்ட இன்னலைப் போக்கிட விரைந்த வீரன், தமிழ்த்தாய்மார் சிந்திய கண்ணீர் துடைத்திட உழைத்த உத்தமன், தமிழின் எதிரிகளால் கொல்லப்பட்ட கொள்கை மறவன், தமிழ்க்காங்கிரஸ் தலைவர் குமார் பொன்னம்பலத்தின் சாவுக்கு நீதி கேட்டு நிற்கின்றது தமிழருலகம். சாயும் நீதியையும் சாயாது தடுத்திட நாம் உறுதி பூண்டுள்ளோம்.

இன்றைய தேர்தல் உங்கள் தலைவிதியை நிர்ணயிக்கப்போகின்ற தேர்தல். இந்தத் தேர்தலில் சந்திரிகாவின் பின்னால் நிற்பவர்களைப் பிரதிநிதிகளாகத் தெரிவு செய்யப் போகின்றீர்களா? அல்லது உங்கள் பிரதிநிதிகளாகத் தலைநிமிர்ந்து நின்று உங்களுக்காகப் பேசக் கூடியவர்களைத் தெரிவுசெய்யப் போகின்றீர்களா?

உங்களுக்கு எதிராகத் தினமும் குண்டு வீசும் கொலைகார ஆட்சிக்கு முண்டு கொடுப்போரை ஆதரிக்கப் போகிறீர்களா?

அல்லது முறியடிக்கப் போகின்றீர்களா? உங்கள் பொருளாதாரத்தை நாசமாக்கி உங்கள் சொத்துக்களைச் சேதமாக்கி உங்களை அநாதைகளாக்கிய ஆட்சிக்கு ஆதரவு கொடுப்பவர்களை ஆதரிக்கப் போகின்றீர்களா அல்லது விரட்டப் போகின்றீர்களா?

அம்மணியின் ஆட்சியில் நிகழ்ந்த செம்மணிப் படுகொலைகளை, எதிரிகளின் உடல் பசிக்குப் பலியான பாவையர்களை, பலியாக்கப்பட்ட பச்சிளம் குழந்தைகளை, இளம் சிறுவர்களை, மாணவர்களை, மாணவிகளை, முதியவர்களை எல்லாம் உங்கள் மனக்கண் முன் நிறுத்துங்கள்.உங்கள் உரிமைக்காக உழைத்து உயிர் நீத்த தியாகிகளை உங்கள் நினைவில் இருத்துங்கள்.

உங்கள் மத்தியில் தமிழ் உணர்ச்சியற்றோர் இல்லை; இனப்பற்று அற்றோர் இல்லை; வீசி எறியும் எலும்புத்துண்டுக்கு வாக்கை விற்கும் துரோகிகள் இல்லை; சுயநலத்துக்காக இன மானம் விற்போர் இல்லை; அடிமைகளாக வாழவிரும்புவோர் இல்லை என்பதை நிலை நாட்டுங்கள்.

தேர்தல் நல்ல சமயத்தில் வந்துள்ளது. இத்தேர்தலை காற்றிலே தூற்றுங்கள். வேண்டாத பதர்களை, பழைய பிரதிநிதிகளை நீக்கவும் நெல்லின் மணிகளைப் போன்ற புதிய பிரதிநிதிகளைத் தெரிவு செய்யவும் இச்சந்தர்ப்பத்தை நன்கு பயன்படுத்துங்கள். நல்லவர்களை, வல்லவர்களை, சுதந்திரப்பயிர் வளர்க்கும் தியாகிகளின் காலை வாரி விடாதவர்களை இலட்சிய வீரர்களை நீங்கள் தெரிவுசெய்ய வாய்ப்பளிக்கவே நாங்கள் இத் தேர்தலில் போட்டியிடுகின்றோம்.

உங்கள் அவலங்களை, உங்கள் மீதான அநியாயங்களை, அட்டூழியங்களை உலகிற்கு வெளிப்படுத்தப் பிரதிநிதிகள் இல்லையே என்ற குறை நீங்கட்டும்.-

என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-5-10)

## தாச்சி பயிற்சி முகாம்

வலிவடக்கு,செப்.3

வடமாகாண தாச்சி விளையாட்டுச் சங்கத்தினால் விளையாட்டு வீரர்களுக்கான பயிற்சி முகாம் நடத்தப்படவுள்ளது.

பதிவு செய்யப்பட்ட கழகங்களின் வீரர், வீராங்கனைகளுக்கு இப் பயிற்சி முகாமில் பல்வேறு துறைகளிலும் பயிற்சி வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

சுதேச விளையாட்டுக்கு பயிற்சி முகாம் ஒன்று நடத்தப்படுவது இதுவே முதற்தடவையாகும்.(ஐ-86)

# வெளிமாவட்டங்களுக்குச் செல்ல பயண அனுமதி பெற்றோர் விவரம்

யாழ்குடாநாட்டில் இருந்து வெளிமாவட்டங்களுக்குப் பயணம் செய்யப் பாதுகாப்பு அனுமதி வழங்கப்பட்டவர்களின் (இம்மாதம் 2ஆம் திகதிவரை) பதிவு இலக்கங்கள் பிரதேச செயலர் பிரிவு ரீதியாக வருமாறு:-

**சங்கானை**

513/152130/A 513/152130/B
513/155479/A 513/155479/B
513/155479/C 513/155480/A
513/155480/B

**யாழ்ப்பாணம்**

511/141034/A 511/141034/D

**கோப்பாய்**

511/134049/A 511/134049/B
511/149876/A 511/149876/B
511/150814/A 511/150814/B
511/150814/C 511/150814/D
511/150856/A 511/150856/B
511/150857/A 511/150857/B
511/150872/A 511/150872/B
511/150897/A 511/150897/B
511/152268/A 511/152287/A
511/152287/B 511/153145/A
511/153145/B 511/153145/C
511/153145/D 511/153146/A
511/153170/A 511/153170/B
511/153199/A 511/153199/B
511/153520/A 511/153520/B
511/153520/C 511/153520/D
511/154352/A 511/154484/A
511/154557/A 511/154557/B
511/157423/A 511/157423/B
511/159698/A 511/159698/B
511/159698/C 511/159698/D
511/159698/E 511/159823/A
511/159823/B

**நல்லூர்**

511/156857/A 511/156857/B
511/156859/A 511/157208/A
511/157208/B 511/157244/A
511/157422/A 511/157422/B
511/157422/C 511/157422/D
511/157422/E 511/157459/A
511/157459/B 511/157500/A
511/157500/B 513/146374/A
513/152118/A 513/152118/B
513/152118/C 513/155167/A
513/155167/B

**சண்டிலிப்பாய்**

513/155416/A 513/155416/B
513/157806/A 513/157806/B

**தெல்லிப்பழை**

513/121688/A 513/155148/A

**உடுவில்**

511/157192/A 511/157603/A
511/157603/B 511/157641/A
511/157641/B 511/158951/A
513/155096/A 513/155096/B
513/155407/A


யாழ். கந்தர்மடம் ஆத்திசூடி வீதி

## அருள்மிகு ஸ்ரீ சித்தி விநாயகர் தேவஸ்தானம்

விநாயகப் பெருமான் அடியார்களே!

மேற்படி ஆலயத்தில்

இன்று (03.09.2000) ஞாயிற்றுக்கிழமை

* காலை 9.00 மணிக்கு விநாயகப் பெருமானுக்குக் கலச சங்காபிஷேகமும்
* பகல் 12.00 மணிக்கு அன்னதானமும்
* மாலை 2.00 மணிக்கு எம்பெருமானுக்கு பஞ்சமுக அர்ச்சனையும், திருவூஞ்சலும் நடைபெற்று விநாயகப் பெருமான் தெருவீதி உலா வரும் அலங்காரக் காட்சியும் நடைபெறும் என்பதனை அனைத்து அடியார்களுக்கும் அறியத் தருகின்றோம்.

அனைவரும் வருக! ஐங்கரன் திருவருள் பெறுக!

(77989) - பரிபாலன சபை.



## வாழ்த்துகின்றோம்

வலிகாமம் கிழக்கு பிரதேச சபைக்கு
உப தலைவராக தெரிவு செய்யப்பட்ட

திரு. U.L.A.ரவி ஜே.பி.யு.எம் அவர்களை
(அமைப்பாளர், ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி, வலி. கிழக்கு)
பிரதேச மக்களுக்கு சேவையாற்றி – சகல வளங்களுடனும்
பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகின்றோம்.

ஊழியர் நலன்புரிச் சங்கம்,
வலி கிழக்கு பிரதேச சபை,
உரும்பிராய் உப அலுவலகம்.

(77982)



வலி. கிழக்கு தென்பகுதி
பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், நீர்வேலி.

## எமது சங்க அங்கத்தவர்களுக்கான முக்கிய அறிவித்தல்

1. மேற்படி எமது சங்கத்தில் 06.03.1992ற்கு முன அங்கத்தவர்களாக சேர்ந்து, 100/- (நூறு ரூபா) பங்குப்பணத்திற்குக் குறைவாக செலுத்தியுள்ள அங்கத்தவர்கள் மீதிப்பணத்தை செலுத்தி உரிமையுள்ள அங்கத்தவர்களாக ஆகுங்கள்.
2. 06.03.1992ற்கு பின் பங்குப்பணத்தை (பங்குப்பணம் 100/-) செலுத்துகின்ற எவ் அங்கத்தவர்களும் பங்குப்பணத்தை செலுத்திய திகதியிலிருந்து ஒரு வருடத்திற்குப் பின்னரே உரிமையுள்ள அங்கத்தவர்களாவார்கள்.

மேற்படி 1ஆம், 2ஆம் பந்திகளில் குறிப்பிடப்படும் அங்கத்தவர்களே கிளைப் பொதுச்சபை கிளைக்குழு என்பனவற்றில் உறுப்பினராக இடம்பெறத் தகுதியானவர்கள்.

அங்கத்தவர்களாக சேரத் தகுதியான ஒருவர் பின்வருவனவற்றை கொண்டிருக்க வேண்டும்.

18 வயதுக்கு மேற்பட்டவராக இருக்க வேண்டும் என்பதுடன்
(1) சங்கத் தொழிற்பரப்பில் வசிக்க வேண்டும்.

**அல்லது**

(2) சங்கத் தொழிற்பரப்பில் வேலை செய்பவராக இருத்தல் வேண்டும்.

**அல்லது**

(3) சங்கத் தொழிற்பரப்பில் நிலையான ஆதனங்களைக் கொண்டிருக்க வேண்டும்.

அங்கத்தவராக சேர விரும்புவோர் இச் சங்கத்தின் அந்தந்தக் கிளைகளில் 2 விண்ணப்பங்களைப் பெற்று, கிளைக்குழுவின் சிபாரிசினை ஏற்று, பின்னர் பங்குப்பணத்தைச் செலுத்திக் கொள்ளமுடியும்.

**முக்கிய குறிப்பு:-**

தற்போது கிளைகளில் அங்கத்தவர் பட்டியல், அங்கத்தவர்களின் பார்வைக்குத் தொங்கவிடப்பட்டுள்ளது. குறித்த அங்கத்தவர் பட்டியலில் தமது பெயர் காணப்படாத அங்கத்தவர்களும் தமது பெயர்களில் ஏதாவது வித்தியாசங்கள், தவறுகள் காணப்படுபவர்களும் மற்றும் பங்குப்பணத்தில் யாதும் தவறுகள், வித்தியாசங்கள் காணப்படுபவர்களும், அவ்விவரத்தினை சங்கச் செயலாளருக்கு எழுத்து மூலம் 10.09.2000ஆம் திகதிக்கு முன் அறிவித்துத் திருத்திவித்துக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

**தலைவர்** **செயலாளர் (பதில்)**

நீர்வேலி.
2000.08.23 (C/12796)

# தினமும் 22 கோடி ரூபா யுத்தத்துக்குச் செலவு!

கொழும்பு,செப்.3

நாட்டின் யுத்தத்துக்கான செலவு நாளாந்தம் 22 கோடி ரூபாவைத் தாண்டிவிட்டதாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் அலரி மாளிகையில் இடம்பெற்ற வைபவமொன்றில் உரையாற்றிய ஜனாதிபதி இந்த நாட்டின் அபிவிருத்திக்கும் முன்னேற்றத்துக்கும் பாரிய தடையாக இருக்கும் யுத்தத்தை இந்த வருட இறுதிக்குள் முடிவுக்குக் கொண்டுவர அரசாங்கம் உறுதியுடன் செயற்படுவதாகக் கூறினார்.

இந்த நாட்டின் வளமும் அபிவிருத்திக்குரிய நிதியும் பெருமளவு யுத்தத்திற்கு செலவு செய்யப்பட்டு வருகின்றது என்றும் - யுத்தத்துக்காக நவீன ரக ஆயுதங்கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன என்றும் அவர் சொன்னார்.

இந்த வருட யுத்த செலவீனம் இதுவரை ரூபா 8 ஆயிரம் கோடியை தாண்டிவிட்டதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (இ-8-5)

# புலிகள் தரப்பில் நால்வர் மோதல்களில் உயிரிழப்பு

வவுனியா,செப்.3

படையினருடனான பல்வேறு மோதல் சம்பவங்களில் தமது தரப்பில் உயிரிழந்த நால்வரின் பெயர் விவரங்களை விடுதலைப் புலிகள் புலிகளின் குரல் வானொலி மூலம் அறிவித்துள்ளனர்.

கடந்த மாதம் 29 ஆம் திகதி மன்னார் உயிலங்குளம் பகுதியில் படையினருடனான நேரடி மோதலில் லெப்ரினன்ட் பரணிதரன் (தியாகராஜா ஸ்ரீதரன் - முல்லைத்தீவு)

நேற்று முன்தினம் கச்சாய்ப் பகுதியில் படையினருடனான மோதலில் கப்டன் ஆனந்தரூபன் (இராசன் ஜெகன் - யாழ்ப்பாணம்), 2ஆம் லெப்ரினன்ட் துசிந்தா (முத்துசாமி வினோதினி - முல்லைத்தீவு) -

அதே தினம் மட்டுவில் பகுதியில் படையினருடனான மோதலில் சிறப்பு எல்லைப்படை வீரர் அப்பன் (பரமசாமி - இராசேஸ்வரன் - கிளிநொச்சி) ஆகியோரே உயிரிழந்தவர்கள் ஆவர். (இ-8)

## ஈ.பி.டி.பி. உட்பட.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

★ தம்பித்துரை சிவகுமாரன்.
★ தியாகராஜபிள்ளை மாணிக்கத்தியாகராசா செல்வராசா.
★ துரைராஜா பாஸ்கரன்.
★ முகமட் அப்துல் கபூர் சபறுள்ளா.
★ கந்தையா சங்கரன்.
★ செல்வராஜா சிறீதரன்.

### முஸ்லிம் ஐக்கிய விடுதலை முன்னணி

★ முதன்மை வேட்பாளர் சாகுல் ஹமீட் முத்தலிப்.
★ முஹமட் சுல்தான் அப்துல் காதர் முஹம்மட் சுஜப்.
★ சாகுல் ஹமீட் நஜீப்.
★ முஹம்மது இஸ்மாயில் சாருக்.
★ நாகூர் பிச்சை முஹம்மது சலீன்.
★ சுல்தான் முஹிதீன் முஹம்மது சித்தீக்.
★ ஜுனைப் றமீஸ்.
★ முஹம்மது யூசுப் முஹிதீன்.
★ பிரான் மொஹிடீன் முஹமட் நியாஸ்.
★ அப்துல் அஸீஸ் முஹம்மட் நிஸ்வி.
★ முஹம்மட் ஜமால்தீன் முஹம்மட் சித்தீக்.
★ முஹம்மட் உசைன் முஹம்மட் சனூன்.

### சிஹல உறுமய

★ முதன்மை வேட்பாளர் உப்புல்த அஸ்வின் குணவர்த்தன.
★ எம்.சி. செனிவிரட்ண.
★ ஏ.எச்.அமரபால.
★ எஸ். குணசேகர.
★ எச்.பி.றுவன் எரந்த.
★ எம்.எச்.எஸ். பிரியந்த டீ சில்வா.
★ எம்.வீரசிங்க.
★ ரீ. வகசெனவி.
★ என்.பி.உடயன்கொட.
★ ஆர்.ஏ.மகிந்த சரத்சந்திர.
★ கே.எல். பாலித விக்கிரமரட்ண.
★ சிறிபால கெட்டி ஆராச்சிகே.

(இ-9)

## முன்னாள் அமைச்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எனத் தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும், முஸ்லிம் காங்கிரஸின் உடன்பாடின்றி, பொ.ஐ. முன்னணியின் மட்டக்களப்பு மாவட்ட வேட்பாளர் பட்டியல் அடங்கிய வேட்புமனு தாக்கல் செய்யப்பட்டுவிட்டது என்றும்-

அதையடுத்தே மட்டக்களப்பில் இராஜதுரை தலைமையில் வேறு ஒரு பட்டியலில் போட்டியிட முஸ்லிம் காங்கிரஸும் அதனோடு இணைந்த மற்றைய கட்சிகளும் முடிவு செய்துள்ளன என்றும் - கூறப்படுகின்றது.

1956 முதல் 1988 வரை மட்டக்களப்பு எம்.பியாக இருந்த இராஜதுரை முதலில் தமிழரசுக் கட்சியிலும் பின்னர் தமிழர் விடுதலைக் கூட்டணியிலும் மூத்த தலைவர்களில் ஒருவராகச் செயற்பட்டவர். 1977இற்குப் பின்னர் கட்சிமாறி ஐ.தே. கட்சியில் சேர்ந்து ஜே.ஆர். ஜெயவர்த்தனாவின் அரசில் அமைச்சராகப் பணியாற்றினார்.

1988 இல் அரசியலிலிருந்து ஒதுங்கிய அவர் சில காலம் மலேசியாவிலும் பிற இடங்களிலும் இலங்கைத் தூதுவராகப் பணியாற்றினார். (உ-8)

## நாயன்மார்கட்டு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாழ். செம்மணி வீதியைச் சேர்ந்த கதிரவேலு யோகேஸ்வரி (வயது 56), சுந்தரலக்ஷ்மி சரச்சந்திரன் (வயது 51) ஆகியோருமே காயமுற்று யாழ். ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டனர்.

நேற்று முன்னிரவில் இரண்டு தடவைகள் நல்லூர், நாயன்மார்கட்டுப் பகுதிகளுக்கு மேலிருந்து அரியாலை, நாவற்குழிப் பகுதிகளை நோக்கி ஹெலிக்கொப்டரிலிருந்து றொக்கட் தாக்குதல்கள் நடத்தப்பட்டன. அதன் பின்னரே மக்கள் குடியிருப்புப் பகுதிகளில் ஷெல்கள் வந்து வீழ்ந்தன.

நேற்று இரு தடவைகள் குடாநாட்டின் வான்பரப்பை வட்டமிட்ட சுப்பசொனிக் விமானங்கள், படையினரின் கட்டுப்பாட்டில் இல்லாத தென்மராட்சிப் பகுதிகள் மீது குண்டு வீச்சுத் தாக்குதல்களை நடத்திச் சென்றன. (உ)

## கப்பல் பயணி.......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நான்கு பஸ்களில் சென்ற பயணிகள் கப்பலில் ஏற்றப்படாமல் திருப்பி அனுப்பப்பட்டமை குறித்து உத்தியோகபூர்வ தகவல் எதனையும் யாழ். சிவில் நிர்வாக அலுவலகத்திடம் இருந்து இச்செய்தி அச்சுக்குப் போகும்வரை பெற்றுக் கொள்ள முடியவில்லை.

'லங்கா முடித்த', 'ஹெந்தல' கப்பல்களின் தற்போதைய பயணிகள் சேவை திருப்திகரமாக அமைந்தால், இக்கப்பல்கள் உடனடியாக மீளவும் யாழ்ப்பாணம் திரும்பி இங்கிருந்து மற்றொரு தடவை திருகோணமலைக்குப் பயணிகள் சேவையில் ஈடுபடும் என்று சம்பந்தப்பட்ட வட்டாரங்களில் நம்பிக்கை தெரிவிக்கப்பட்டது. (உ)

# சீமெந்து ஊழியர்களுக்கு ரூபா 600 கொடுப்பனவு

## டக்ளஸுக்கு திறைசேரி தெரிவிப்பு

கொழும்பு,செப்.3

காங்கேசன்துறை சிமெந்துக் கூட்டுத்தாபனம் மற்றும் லங்கா சிமெந்து லிமிட்டெட் ஆகியவற்றில் பணிபுரியும் ஊழியர்களுக்குரிய மேலதிக இடர்காலக் கொடுப்பனவான 600 ரூபாவை நேற்று முன்தினம் முதல் வழங்க உத்தியோகபூர்வ அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

இத்தகவலை யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவரும் ஈ.பி.டி.பி.யின் செயலாளர் நாயகமுமான டக்ளஸ் தேவானந்தாவுக்கு திறைசேரி அலுவலகம் தெரிவித்துள்ளது.

மேலும் இந்த ஊழியர்களுக்கு வழங்கப்பட வேண்டிய ஏனைய கொடுப்பனவுகளை வெகுவிரைவில் வழங்க நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாகவும் திறைசேரி அலுவலகம், டக்ளஸ் தேவானந்தாவுக்கு உறுதியளித்துள்ளது.

கடந்த மாதம் 22ஆம், 23ஆம் திகதிகளில் காங்கேசன்துறை சிமெந்துக் கூட்டுத்தாபன ஊழியர்கள், அரசினால் வழங்கப்படும் மேலதிக இடர்காலக் கொடுப்பனவான 600ரூபா தமக்கும் வழங்கப்படவேண்டும் என்று கோரி காங்கேசன்துறைக் கூட்டுத்தாபன யாழ். அலுவலகம் மற்றும் உரும்பிராய் கொங்கிறீற் வேலைத்தளம் ஆகியவற்றின் முன்பாக முழுநாள் மறியல் போராட்டத்தை நடத்தியது தெரிந்ததே.

பின்னர் தொழிற்சாலை ஊழியர்களின் சங்கப் பிரதிநிதிகள் யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவரும் ஈ.பி.டி.பியின் செயலாளர் நாயகமுமான டக்ளஸ் தேவானந்தாவைச் சந்தித்துப் பேச்சு நடத்தியதன் விளைவாக அரசினால் இந்த இடர்காலக் கொடுப்பனவு வழங்க கொள்கையளவில் இணக்கம் காணப்பட்டதும் -

இதேபோன்று லங்கா சிமெந்து லிமிட்டெட் ஊழியர்களும் இந்த இடர்காலக் கொடுப்பனவைத் தமக்கும் வழங்கக்கோரி டக்ளஸ் தேவானந்தாவைச் சந்தித்துப் பேச்சு நடத்தியதன் பலனாக அவர்களுக்கும் வழங்க இணக்கம் காணப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது. (இ-7-8)

## வடக்கு .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குழு, தேர்தல் ஆணைக்குழு ஆகியன அமைக்கப்படும்.

☆ நாட்டின் முன்னேற்றத்துக்கு இளைஞரணி ஒன்று ஸ்தாபிக்கப்படும்.

☆ வெளிநாட்டு வேலைவாய்ப்புக்காக விசேட காப்புறுதித் திட்டமொன்று அறிமுகப்படுத்தப்படும்.

☆ இடம்பெயர்ந்தோர் தொடர்பாக ஆராய சுதந்திரமான குழு ஒன்று நியமிக்கப்படும்.

☆ நிறைவேற்று ஜனாதிபதி முறை இல்லாமல் செய்யப்பட்டு மக்களால் தெரிவு செய்யப்படும் பிரதமர் நாடாளுமன்றத்துக்கு பதில் கூற வேண்டிய விதத்தில் ஆட்சிமுறை மாற்றப்படும்.

☆ நாடாளுமன்றின் பதவிக்காலம் ஆறு ஆண்டுகளிலிருந்து ஐந்து ஆண்டுகளாகக் குறைக்கப்படும்.

☆ இராணுவத்தில் ஏற்படும் சேதங்களைக் குறைப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

☆ அனைத்து அரசியல் கட்சிகளினதும் இணக்கத்தோடுதான் அரசமைப்புத் திருத்தப்படும்.

☆ சகல அரசியல் கட்சியினரும், மத குருமார்களும், பொதுசன அமைப்புகளைச் சேர்ந்தோரும், அதே போன்று விடுதலைப்புலிகளும் இதற்காகக் கலந்தாலோசிக்கப்படுவர்.

☆ வடக்குக் கிழக்கு மாகாணத்தின் நிர்வாகத்தைக் குறுகிய காலத்துக்குக் கவனிக்க இடைக்கால நிர்வாக சபையொன்று உருவாக்கப்படும்.

☆ நவீன மயப்படுத்தப்பட்ட புதிய கல்வி முறை அறிமுகப்படுத்தப்படும். (உ-8-5)


ரீகல் வீடியோ - தற்காலிக முகவரி மாற்றம்

ஈச்சமோட்டையில் இயங்கிய ரீகல் வீடியோ ஸ்தாபனம் தற்போது **ஆஸ்பத்திரி வீதி, கொட்டடி, யாழ்ப்பாணம் (பழைய லைடன் காமன்ஸ் அருகில்)** எனும் முகவரியில் இயங்குகின்றது என்பதை எமது வாடிக்கையாளர் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

சொக்கட்டான் பந்தல், பிளாஸ்டிக் கதிரைகள், சமையல் பாத்திரங்கள் மற்றும் உங்கள் வைபவங்களுக்குத் தேவையான சகல பொருள்களையும் ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ளலாம். சிறந்த முறையில் கொம்பியூட்டர் மூலம் மிக்ஸிங் செய்து வீடியோ படம் பிடித்திடவும் நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம்.

ரீகல் வீடியோ,
ஆஸ்பத்திரி வீதி, கொட்டடி,
யாழ்ப்பாணம்.

(77903)

NEW SCIENCE HALL
கன்னாதிட்டி வீதி - யாழ்ப்பாணம்
2001 - A/L - CHEMISTRY
PAPER CLASS
Mr.மணியம் (B.Sc.)
ஆரம்பம்: 05.09.2000 - செவ்வாய்
பிற்பகல் - 3.00 மணி (பழைய நேரம்)
ORGANIC CHEMISTRY
பிற்பகல் - 4.00 மணி (பழைய நேரம்)
(77907)

மேலும் ஒரு பிரிவு (3வது பிரிவு) ஆரம்பம்
07.09.2000 - பி.ப 3 மணி
OXFORD ENGLISH ACADEMY
சுப்பர்மடம் - பருத்தித்துறை
BY : MR.B.JOTHY
(77983) (அனுமதியை முன்கூட்டியே பெறவும்)

BRIGHTMAN
கல்வி நிலையம்
(நிராவியடிப் பிள்ளையார் கோயில் முன்பாக)
A/L 2001
பிரிவு II மின்புலம்
ஆசிரியர்: திரு.ஜெயசீலன்
ஆரம்பம்:
04.09.2000 - MON - 2.30p.m
(77971)

சங்கானை வர்த்தகர் சங்கம்
சங்கானை.

சங்கானையில் மக்கள் வங்கிக் கிளையை மீள இயங்க வைத்தமைக்கு ஆக்கமும், ஊக்கமும் அளித்த மக்கள் வங்கிப் பொறுப்பதிகாரிகளுக்கு எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

நிர்வாகத்தினர்,
சங்கானை வர்த்தகர் சங்கம்,
சங்கானை.

(77977)

ஆசிரியர்களே!
நம் தேசம் சிறக்க உங்கள் சேவை வேண்டும்.
நீங்கள் சிறக்க,
அளித்திடுங்கள் உங்கள் வாக்குகளை
ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சிக்கு!
ஈ.பி.டி.பி.

வீணையே உங்கள் சின்னம்! சேவையே எங்கள் எண்ணம்!!



X

1996 – 99ஆம் ஆண்டு வரை யாழ். மாவட்ட அபிவிருத்திக்காக 8 கோடியே 10 லட்சம் ரூபா ஈ.பி.டி.பி. பாராளுமன்ற உறுப்பினர்களின் நிதியில் இருந்து வழங்கப்பட்டுள்ளது.

(C/12799)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 03-09-2000 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.